www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல் : 40 | ஆனி - 1993 | அன்பளிப்பு: ரூபா 5 -


# தமிழரின் இனப்பிரச்சனை கடும்போக்கு தொடர்கின்றது

தமிழரின் தேசியஇனப் பிரச்சினையை நேர்மையானமுறையிலும், சமாதானவழியிலும் தீர்த்துவைக்கும் எண்ணம் புதிய அரசிற்கும் இல்லை என்பது, போர்க் கைதிகள் விவகாரத்தில் அரசு நடந்து கொண்ட முறையிலிருந்து தெளிவாகியுள்ளது.

சிங்களப் போர்க்கைதிகளின் விடுதலைக்குப் பதிலாக, தமிழ்மக்கள் மீதான பொருளாதாரப் பளுவை நீக்கவேண்டும் என்று இணக்கம் காணப்பட்ட ஒரு உடன்பாட்டை திடீரென இடைநிறுத்திய செயல், புதிய அரசின் தீவிர தமிழின விரோதப் போக்கையே எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன், தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசியல் நகர்வுகளையல்ல இராணுவ படையெடுப்புகளையே மேற்கொள்ள, புதிய அரசும் முடிவெடுத்துள்ளது.

அதேவேளை, தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கின் அரசியல் விவகாரங்களில் முடிவெடுக்கும் உரிமையும், நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் படைத்துறைத் தலைமையின் கைகளைச் சென்றடைந்துவிட்டதையும் இவ் விவகாரம் வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த மூன்றுவருடங்களாக சிறீலங்கா அரசின் பாராமுகத்தால் விடுதலையின்றித் தவித்த 39 சிங்களப் போர்க் கைதிகள், அரசின் கவனத்தைத் திருப்புவதற்காகச் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தபோது, கைதி விவகாரம் சூடுபிடித்தது.

தென்னிலங்கையிலிருந்து எழும் பல்வேறு நெருக்கடிகள், சங்கடங்களிலிருந்து விடு

►

**உள்ளே: கரும்புலிகள் சிறப்பிதழ்**



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# புலிகளின் குரல்

## யூலை 5, கரும்புலிகள் நாள்!

முதலாவது கரும்புலி களத்தில் இறங்கிய யூலை 5ஆம் திகதியை கரும்புலிகள் நாளாக, புலிகள் இயக்கம் பிரகடனப் படுத்தியுள்ளது.

கரும்புலி வீரர்களின் அதிஉயர் தியாகத்தை-வீரத்தை-கௌரவிக்கும் ஒரு தினமாகவும், அந்த மறத்தமிழ் வீரர்களின் ஆச்சரியமூட்டும் ஆன்ம உறுதியை -வல்லமையை- மக்களுக்கு உணர்த்தும் ஒரு நாளாகவும் கரும்புலிகள் நாள் கொண்டாடப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவை கருதி காலத்திற்குக்காலம், தலைவர் பிரபாகரன் அவர்கள் புதிய புதிய போருபாயங்களை வகுத்து- நடைமுறைப்படுத்தி- விடுதலைப் போராட்டத்தை வளர்த்து வருகின்றார். அத்தகைய போருபாயங்களில் ஒன்றுதான் கரும்புலித்தாக்குதல் முறையாகும்.

1987ஆம் ஆண்டு யூலை 5ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்களப்படை முகாம் மீது, முதன்முதலில் கரும்புலித்தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

அன்றைய காலகட்டத்தில் ஒரு இராணுவ நெருக்கடிக்குள் சிக்கியிருந்த எமது விடுதலைப் போராட்டத்திற்கு, இந்தக் கரும்புலித் தாக்குதல் ஒரு திருப்புமுனையைக் கொடுத்ததுடன், புதியதொரு உத்வேகத்தையும் வழங்கியது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கரும்புலித்தாக்குதலை - வெடிமருந்து வண்டியை ஓட்டிச் சென்று எதிரிமுகாமினுள் மோதி, தன்னுடன் எதிரிமுகாமையும் தகர்த்தெறிந்து- முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் ஒரு மாபெரும் சாதனையை நிகழ்த்தினார். அன்றிலிருந்து இன்றுவரை பல கரும்புலித்தாக்குதல்கள் நடாத்தப்பட்டுவிட்டன.

ஒவ்வொரு கரும்புலித்தாக்குதலும் எமது விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கி உந்தித்தள்ளி, வெற்றியின் பாதையில் குறுக்கே நிற்கும் தடைக்கற்களைத் தகர்த்தெறிகின்றது. அதாவது தமிழீழ விடுதலைப் போராட்டச்சக்கரத்தை வேகமாக நகர்த்தப் பேருதவியாக இருக்கும் புலிகளின் ஒப்புவமை அற்ற ஒரு போர்க்கருவிதான் கரும்புலிகள். இது போராட்ட விரோத சக்திகளை அழித்து, எதிரிப்படைகளைச் சிதறடித்து, இறுதி வெற்றியை எளிதாக்கிக் கொடுக்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கரும்புலித்தாக்குதலின் தேவை பற்றிய எண்ணம், ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்திலேயே தலைவரிடம் இருந்தது.

குறைந்த உயிரிழப்புகளுடன் பெரிய வெற்றிகளை அடைய வேண்டிய அவசியம் எமது போராட்டத்திற்கு உண்டு.

சிங்கள இனத்தைப் போலல்லாது நாம் எண்ணிக்கையில் மிகவும் குறைந்த ஒரு இனம். அதுபோலவே எதிரி இராணுவத்துடன் ஒப்பிடும்போது, குறைந்தளவு போராளிகளையும் சிறியளவில் போர்க்கருவிகளையும் கொண்டுள்ள ஒரு விடுதலை இயக்கம்.

எனவே, போராளிகள் மத்தியில் ஏற்படக்கூடிய உயிரிழப்புகளை இயன்றளவு குறைத்தும், அதேவேளை பாரிய வெற்றிகளையும் தேடிக்கொள்ளவேண்டிய தேவை எமது போராட்டத்திற்கு உள்ளது. அப்படி நிகழ்ந்தால்தான் நாம் இறுதி வெற்றியை- தமிழீழத்தின் பிறப்பைக் காணமுடியும்.

கரும்புலித்தாக்குதல் முறை ஈழத்தமிழினத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த வரலாற்றுத் தேவையை நிறைவேற்றி வைக்கக்கூடியது.

ஒவ்வொரு கரும்புலிகளும் வெடிமருந்தைச் சுமந்துகொண்டு, அணுகுண்டை விட அதிகளவு ஆற்றல் வாய்ந்த ஆன்ம உறுதியுடன் எதிரி இலக்குமீது பாய்ந்து, தன்னுடன் சேர்த்து எதிரிகளையும் அழித்து மாபெரும் தியாகம் புரிகின்றனர்.

பெருந்தொகைச் செலவிலான நவீன போராயுதங்களுடன் அல்லது பெரும் எண்ணிக்கையிலான போராளிகளது இழப்புடன் செய்து முடிக்கப்படவேண்டிய ஒரு இராணுவ வெற்றியை, ஒரு கரும்புலி அல்லது ஓரிரு கரும்புலிகள் செய்து முடிக்கின்றனர். அதேவேளை, அணுகமுடியாத இலக்குகள் என்ற ஒரு விடயம் கரும்புலிகளது அகராதியில் இல்லை. அதுபோலவே கரும்புலித்தாக்குதல்களைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்ற நம்பிக்கையும் எதிரிகளின் கூடாரத்தில் இருக்க முடியாது.

இன்று, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு பெரும் பலமாக கரும்புலிகள் அணி மாறிவிட்டது.

இது, தமிழீழத்தின் பிறப்பிற்கு மேலும் மேலும் உறுதியும் வேகமும் சேர்க்கின்றது.

## தமிழர் பிரச்சினை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுவதற்காக கைதிகளை விடுவிக்க அரசாங்கம் முயன்றது.

இந்தப் போர்க்கைதிகளின் விடுதலையைப் பயன்படுத்தி, தமிழ் மக்கள் மீதான பொருளாதாரப் பளுவை நீக்கும் அதே வேளை, ஒரு சமாதான சூழலை உருவாக்கவும் புலிகள் விரும்பினர்.

யாழ்ப்பாணத்திலுள்ள அரச திணைக்களங்களின் தலைமை அதிகாரிகளையும் மற்றும் யாழ். அரச அதிபரையும் அழைத்து, அவர்களைக்கொண்டே வடமாகாண மக்களின் ஒருமாதத் தேவைப் பட்டியலைப் புலிகள் தயாரித்தனர். அதுவே அரசிடமும் சமர்ப்பிக்கப்பட்டது. இத் தேவைப் பட்டியலில் உள்ள பொருட்கள் சீரான முறையில் விநியோகம் செய்யப் படும்போது, குறித்த கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவர் என, புலிகள் உறுதியளித்தனர்.

ஆனாலும் பொருளாதாரத் தடை நீக்கம் என்பது புலிகளையும் தமிழ் மக்களையும் உற்சாகப்படுத்திவிடுவதுடன், தமிழர் தரப்பின் போர் ஆற்றலையும் அதிகரிக்கச் செய்துவிடும் என்று கூக்குரலிட்ட படைத்துறை அதிகாரிகள், விஜேதுங்காவின் அரசைப் பணியச்செய்தனர். அரச திணைக்கள அதிகாரிகளாலேயே தயாரிக்கப்பட்ட ஒருமாதத் தேவைப்பட்டியலை, ''மிக அதிகமானது'' என்று காரணம் கூறி, இந்த விவகாரத்துக்கு அரசாங்கம் ஒரு முட்டுக்கட்டையைப் போட்டுள்ளது.

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கும் நோக்குடன் சிங்கள அரசு ஒரு போர்முறைத் திட்டத்தைத் தீட்டி, அதைக் கடந்த மூன்று வருடங்களாக நடைமுறைப்படுத்திவருகின்றது.

இராணுவ - அரசியல் -பொருளாதார நோக்கங்களைக்கொண்ட அந்த நாசகாரப் போர்முறைத் திட்டத்தில், தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையும் ஒரு முக்கிய அங்கம்.

புலிகள் இயக்கத்தின் போர் ஆற்றலைச் சிதைப்பதும், பொதுமக்களின் மன உறுதியையும் விடுதலைப்பற்றையும் தகர்ப்பதும், பொருளாதாரத் தடையின் பிரதான நோக்கம். இந்த நோக்கத்தைப் பூரணமாக நிறைவேற்றுவதற்காக. குடாநாட்டைச்சூழ ஒரு இராணுவ முற்றுகையையும் அரசு இட்டது.

ஆனால், மூன்றுவருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும், சிங்களப் படைகளினால் புலிகளின் போர் ஆற்றலைச் சிதைக்கவும் முடியவில்லை; மக்களின் மன உறுதியைத் தகர்க்கவும் முடியவில்லை என்பதும் நிருபணமாகிவிட்டது. அதேவேளை, குடாநாட்டைச் சூழவுள்ள இராணுவ முற்றுகையை உடைத்த புலிகள், கிளாலிக் கடல் வழியைத் திறந்து போராட்டத்தில் புதிய பரிமாணத்தையும் ஏற்படுத்தினார்கள்.

சிங்களப் படைத்துறையினர் எண்ணுவதுபோல தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத்தடை, தமிழ் மக்களைப் பெரும் இன்னலுக்குள்ளாக்கினாலும், விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடவில்லை. மாறாக, அது புதிய பரிமாணத்துடன் போராட்டத்தை வளர்த்துச் செல்கின்றது என்பதே உண்மையாகும்.

பொருளாதாரத் தடை நீக்கத்தை அரசு திடீரென இடைநிறுத்திய விவகாரம், ஒட்டுமொத்தமாக ஒரு விடயத்தைத் தெளிவாக்கியுள்ளது.

அதாவது, தமிழர் இனப்பிரச்சினையின் தீர்வாக அமைதிவழிமூலமான அரசியல் தீர்வையல்ல, போர்வழிமூலமான இராணுவத் தீர்வையே புதிய அரசும் தனது கொள்கையாக வரித்துக் கொண்டுள்ளது என்பதே அதுவாகும்.

பருந்துக்கு விருந்து கொடாதது பயங்கரவாதமா?



நன்றி: சிரித்திரன்

www.eelamview.com

www.eelamview.com



# கரும்புலிகள்

"கரும்புலிகள்" என்ற வார்த்தைப் பிரயோகம் உலகளாவியரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்திமிக்கதொரு சொற்பதமாகிவிட்டது.

கரும்புலித் தாக்குதலை நடாத்தும் விடுதலைப் புலி உறுப்பினர்களின் பிரமிப்பூட்டும் தியாகங்கள், உலக சமுதாயத்தை அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தி வருகின்றன.

மனிதன் பிறந்ததே வாழ்வதற்காகத்தான். அப்படியானால் இறப்பதற்காகவே களம் புகும் இக்கரும்புலிகள் யார்?

இவர்களது உருவாக்கத்தின் வரலாற்றுப் பின்னணி என்ன?

ஈடு இணையற்ற இவர்களது ஈகமும், மன ஓர்மமும் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகளானது மானிட ஆய்வாளர்கள் மத்தியில் ஆராய்ச்சிக்குரியனவாகிவிட்டன.

இன்று, உலகெங்குமுள்ள அடக்குமுறையாளர்கள் தங்களுக்குள் கைகோத்தபடி, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க விழையும் மக்களை மிருகத்தனமாக அடக்கி ஒடுக்க முனைகின்றனர்.

இவர்களிடம் ஆள் - ஆயுத பலம் உண்டு.

ஆட்சி அதிகாரம் உண்டு. தொழில்நுட்ப வலுவுண்டு. இவற்றைத் தேவைப்படும் இடங்களுக்கு, தேவைப்படும் நேரத்தில் கொடுத்து மாறி, போராட்ட சக்திகளை பலம் இழக்கச் செய்து, தங்களது அடக்குமுறைகளை வலுப்படுத்துகின்றனர்.

இந்த நவீன அடக்குமுறையாளர்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவுக்கு ஆள் - ஆயுத - தொழில்நுட்பத் திறன்களை போராட்ட சக்திகள் கொண்டிருப்பதில்லை.

மிகக் குறைந்த அளவில் இவர்களுக்கு இருக்கும் போராட்டத் திறன்களில் இருந்து மிக உச்சப்பயன்களைப் பெற்றாலொழிய, போராட்டச் சக்கரத்தை ஓர் எல்லைக்கு அப்பால் நகர்த்த முடியாது.

எனவே ஒடுக்குமுறையாளர்களின் நாடியை ஒடுங்கச்செய்யும் அளவுக்கு, பல்வேறு திசைகளிலிருந்தும் வெவ்வேறு வடிவங்களில் போர்ச்சக்கரம் நகர்த்தப்பட வேண்டும். இந்தப் போர் வடிவங்களுக்குள்ளேயே உயர்ந்ததும், உன்னதமானதுமான புலிகளின் போர் வடிவம்தான் கரும்புலித் தாக்குதலாகும்.

தன்னை இழந்து எதிரிகளில் பலரை அல்லது எதிரியின் பலமிக்கதொரு இலக்கை அழிக்கக்கூடிய ஒரு படையணி ஒன்றை அமைக்கும் யோசனையை, தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே கொண்டுள்ளார்.

அந்த எண்ணக்கருவைச் செயற்படுத்தக்கூடிய ஆற்றலை புலிவீரர்கள் மத்தியில் சிறுகச்சிறுக ஏற்படுத்திக்கொண்டுவந்தார்.

1981 ஆம் ஆண்டு திரு. தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் சிங்கள இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு கொழும்பில் வைக்கப்பட்டிருந்தபொழுது, தற்கொலைப்படை அணி ஒன்றுக்குத் தலைமை தாங்கிச் சென்று அவர்களை மீட்டுவர, பிரபாகரன் முயற்சித்தார். ஆனால் அது பல்வேறு காரணிகளால் தவிர்க்கப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர், "ஒப்பறேசன் லிபறேசன்" என்ற பெயருடைய இராணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிய சிங்களப் படைகள் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தன. இதன் மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல் ரீதியான போரிடும் ஆற்றல் திடீரெனக் கூடியது. சிறீலங்கா அரசும், புலிகளை அழித்துவிடலாம் என திமிருடன் சிந்திக்கத்தொடங்கியது.

இதேசமயம், அந்த இராணுவ நடவடிக்கை காரணமாக பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து மற்றைய பகுதிகளுக்குச் சென்றதுடன், அந்தத் திடீர் நடவடிக்கையால் மக்கள் குழம்பியும் போராட்ட வெற்றியில் நம்பிக்கை இழக்கக்கூடிய சூழலும் தோன்றியது.

இந்தச் சூழ்நிலைகளில்தான் ஒரு கரும்புலித் தாக்குதலை நடாத்த தலைவர் பிரபாகரன் முடிவெடுத்து, அதற்கான ஆயத்தங்களைச் செய்தார்.

1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 5 ஆம் திகதி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி புகுந்து, அம்முகாமைச் சின்னாபின்னமாக்கியது.

சிங்கள அரசையும், அதன் இராணுவ இயந்திரத்தையும் கிலிகொள்ளச் செய்த அந்த முதலாவது கரும்புலித் தாக்குதலை, கரும்புலி கப்டன் மில்லர் செய்துமுடித்தான்.

அன்றிலிருந்து இன்றுவரை பல கரும்புலித் தாக்குதல்களை நிகழ்த்திவிட்டோம். அதில் பல கரும்புலிகள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

ஒவ்வொரு விடுதலைப் புலி வீரனும் வீராங்கனையும் சாவைச் சந்திக்கத் தயாரான நிலையில்தான் இருக்கின்றார்கள். ஆனால், தங்களுடைய சாவு எப்போது வரும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

போர்க்களத்திற்குச் செல்லும்போதுகூட திரும்பி வருவேன் என்ற நம்பிக்கையுடன்தான் ஒரு புலிவீரன் செல்கிறான். சிலவேளைகளில் அங்கே அவன் சாவைச் சந்திக்கலாம் அல்லது திரும்பி வரலாம்.


ஆனால் கரும்புலிகளின் நிலை வேறுபட்டது. களம் புகுவதற்கு பல நாட்களின் முன்னரேயே தங்களது சாவைத் தெரிந்துகொண்டுவிடுகிறார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப்போகிறேன் என்ற உண்மையைப் பூரணமாகத் தெரிந்துகொண்டுதான், கரும்புலிகள் வெடிமருந்தைத் தங்களுடன் கொண்டுசெல்கின்றார்கள்.

தன்னை அழிக்துக்கொள்ள முனையும் தற்கொலைமுயற்சியைப் போலல்ல இது. அல்லது எதிரியின் கண்ணோட்டத்தின்படி கொடூரம் மிக்கதும் மானிட இனமாக இல்லாததுமான ஒருபூதம் அல்ல இது: அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒருதேசிய இயக்க சக்திக்கு உந்துவிசையாக-விளங்கும் உயரிய போர் வடிவம்தான் எங்களது கரும்புலிகள்.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றிகொள்ளப்படமுடியாததும், உலகின் எந்தத் தொழில்நுட்பத்தாலும் தடுக்கமுடியாததும், உலகின் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்க முடியாததும்தான் எங்களது கரும்புலிகளின் மனோபலம்.

இந்த மனோபலம் ஒரு வீர உணர்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடு மட்டுமல்ல. எமது சமுதாய எண்ணவோட்டத்தில் பிரளயத்தை ஏற்படுத்தப்போகும் சக்திகொண்ட ஒரு மாபெரும் அரசியல் வடிவமுமாகும்.

ஒவ்வொரு கரும்புலியும் தனது உயிரைப் போக்கிக்கொள்ளும்போது நிகழும் பூகம்பம், தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை முன்னோக்கித் தள்ளிவிடுவதுடன், வீரம்மிக்க, யாருக்கும் அடிபணியாத, அடக்க நினைப்பவரை நடுங்க வைக்கும் ஆற்றல் கொண்ட, தமிழ்ச்சமூகத்திற்குத் தேவையான உணர்வையும் ஊட்டிவிடுகின்றது.



தலைவர் அவர்களுடன் கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ். முதலாம்பக்கத்தில் – தலைவர் அவர்களுடன் கரும்புலிகள் – கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன்.

இராணுவ முகாமிற்குள் இருக்கும் பலநூறு எதிரிகளின் கரங்களிலிருந்து முழங்கிக்கொண்டிருக்கும் துப்பாக்கிகளைக் கருத்திலெடுக்காது, உடைந்து நொருங்கிப்போய்க் கிடக்கும் பாதை வழியே, சீராக - நிதானமாக - வெடிமருந்து வண்டியை ஓட்டிச்சென்று, எதிரி முகாமின் இதயத்திற்குள்ளே புகுந்து, தன்னையும் சேர்த்து வெடிக்கச் செய்வதென்பது சாதாரண விடயமல்ல.

இயல்பாகவே அச்சமூட்டும் அலைகளைக் கொண்ட அகண்ட சமுத்திரத்துக்குள், நடு இரவில், எதிரியின் நவீன காவற் கருவிகளையும் புத்திசாதுரியமாக மீறி, வெடிமருந்துப் படகுடன் உட்புகுந்து எதிரியின் கப்பலை நெருங்கி, முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்கை இனம் காண்பதற்காக ஒருமுறை கப்பலைச் சுற்றிவந்து, குறித்த இலக்கின்மீது மோதி, வெடிமருந்துப் படகுடன் சேர்ந்து வெடித்துச் சிதற, ஒரு மனித மனம் உடன்படாது.

இவைகள் ஒரு சாதாரண வீரனால் செய்யப்பட முடியாதவை. இதைச் செய்வதற்கென்றொரு ஆன்மீக பலம் தேவை. தன்னை அழித்துக்கொள்ளத் தயாரான மனோதிடம் தேவை. தனது இறுதி நேரத்திலும்கூட பதற்றமின்றி, உறுதியுடன், குறி பிசகாது எதிரியைத் தேடி ஓடும் வீரம் தேவை. விரக்தி காரணமாகவோ, முட்டாள்தனமாகவோ தேச பக்தியையும், வீர உணர்வையும் அடித்தளமாகக்கொண்ட இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால், உலகில் எவராலும் எம்மை எதுவும் செய்யமுடியாததுடன், சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழும் பலத்தையும் நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

இன்று பல நூற்றுக்கணக்கான புலி வீரர்கள் தங்களைக் கரும்புலி அணியில் இணைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு முறையும் கரும்புலித் தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்படும்போது, தன்னைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு வீரனும் வீராங்கனையும் முண்டியடிக்கின்றார்கள்.

அலையலையாக கரும்புலித் தாக்குதலுக்குத் தயாராகும் இந்தத் தியாகச் செயலை, உலகில் எங்குமே காணமுடியாது. இது உலக அதிசயங்களில் புதியதொன்றாகும்.

களம்புகும் கரும்புலிகளின் பிரமிப்பூட்டும் வீரச் சாதனைகள், சிங்கள ஆளும்வர்க்கத்துக்குக் கிலியை உண்டுபண்ணுகின்ற அதேசமயம், அந்த உன்னதமான அர்ப்பண உணர்வு ஏற்படுத்தும் சமூகத் தாக்கம், தமிழீழக் குடிமக்களின் மனதில் இருக்கும் சுதந்திர ஒளியை இன்னும் வளர்த்துச் செல்லும் என்பது உறுதி! ○

www.eelamview.com

www.eelamview.com



# கரும்புலிகளின் வாழ்வில்...

## பெருமை

''என்ரமகன்எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் எண்டிறது, என்ர நம்பிக்கை தம்பி. அதனால நான் அவன்ர போக்குகளைப்பற்றி பெரிசா யோசிக்கிறதில்லை''மில்லரின் அம்மா, தன் பிள்ளையைப் பற்றி பெருமையோடு கூறிக்கொண்டிருந்தாள்.

''அவனொரு துடியாட்டமான பெடியன். ஒரு இடத்தில ஆறுதலா இருக்கிறதைக் காணேலாது ஏதாவதுஒண்டுசெய்துகொண்டுதானிருப்பான். மண்ணைக்கிண்டுவான்,பற்றறியையும் வயரையும் வைச்சு முடிஞ்சுகொண்டிருப்பான், அல்லது அப்பாவின்ர கார் 'பொனட்டை'திறந்துபோட்டு, அதுக்குள்ள ஏதாவது கழட்டிப் பூட்டிக் கொண்டிருப்பான் .........''

அம்மா தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தாள்.

''மற்ற ஆட்களுக்கு உதவி செய்யிற பழக்கம் அவனிட்ட சின்னனில இருந்தே இருந்தது. ஆர் என்ன உதவி கேட்டாலும் உடனே போய் செய்து கொடுப்பான்—— முயற்சியும் இரக்கமும் அவன் பிறக்கும் போதே அவனோட கூடப்பிறந்ததுகள் தம்பி''



கரும்புலி கப்டன் மில்லர்
(வல்லிபுரம் வசந்தன்)
துன்னாலை, யாழ்.
(01-01-1966 — 05-07-1987)

மில்லர் சிறுவனாக இருந்த நாட்களில் அப்பா கார் ஓட்டும் போது அருகிலிருந்து அவதானித்துக் கொண்டிருப்பவன், அப்பா இல்லாத நேரங்களில் அதையே திரும்பச் செய்து பார்க்கத்துவங்கினான். அடிக்கடி நின்ற இடத்திலேயே இயங்கிய கார் பின்பு மெல்ல உருளத் துவங்கியது. நாட் செல்லச் செல்ல அகலமான வீட்டு முற்றத்தில் முன்னுக்கும் பின்னுக்கும் போய் வந்தது. ஒருநாள் அம்மா சமையல் அறையில் வேலையாக இருந்தபோது, கார் வீதியிலே ஏறிவிக்கிவிக்கிஓடத்துவங்கிவிட்டது. அம்மாவைப் பயம் பற்றிக் கொள்ள வீதியிலே ஓடிவந்து நின்று பார்த்தாள்.

இப்படித்தான் இன்னும் ஒருநாள்:

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் எரிபொருள் தீர்ந்து போனதால் வீட்டிற்கு முன்னால் நின்று திண்டாடிக்கொண்டிருந்தார்கள். எங்கோ இருந்து வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்த மில்லர், அவர்களிடம் விடயத்தைக் கேட்டறிந்தான்.

வீட்டிற்குள் வந்தவன், மெதுவாக ஒளிந்து ஒளிந்து பின்னால் போய், கார் 'ராங்கிற்குள்' குழாயைச் செலுத்தி, வாயால் இழுத்து பெற்றோல் எடுத்து அவர்களிடம் கொடுத்து அனுப்பிவிட்டு, ஒரு அசல் அப்பாவியைப்போல அம்மாவுக்கு முன்னால் வந்து நின்றான். நடந்ததைக் கண்டபோதும் அம்மா அவனிடம் எதுவும் கேட்கவில்லை. அம்மாவுக்கும் அது பிழை மாதிரித் தெரியவில்லை.

தன்பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகவே செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை. அதனால், அவனது செய்கைகளைப் பற்றி அம்மா கவலைப்படுவதில்லை

காலச்சக்கரம் தன்பாட்டில் உருண்டு சென்றது. இப்போது 1984 இன் ஆரம்பம். எங்கள் தேசத்தில் அடிக்கடி வெடியோசை கேட்கத்தொடங்கியது. எங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கை மாறியபொழுது, அது மில்லர் வீட்டிலும் பிரதிபலிக்கத்தொடங்கியது. மில்லரின் போக்கும் மாறிவிட்டது.

முன்புபோல், பழைய நண்பர்களுடன், மாந்தோப்பில் விளையாடுவது நின்றுபோனது. இப்போது புதிய நண்பர்களுடன் வெளியில் திரியத் துவங்கினான்.

ஒருநாள் பள்ளிக்கூடத்திலிருந்து அவசர அவசரமாக ஓடிவந்த தம்பி சொன்னான், ''அம்மா...... அம்மா அண்ணா சந்தியடியில நோட்டீசு குடுத்துக்கொண்டு நிற்கிறான்.''

அம்மாவுக்கு உள்ளூரப் பயம்தான். ஆனாலும், அம்மா அவனைப் புரிந்து கொண்டாள்.

அவனின் புதிய நண்பர்கள் அவனைத்தேடி வீட்டிற்கு வருவார்கள். மில்லர் அவர்களோடு புறப்பட்டுப்போவான். இப்படிச் செல்கிறவன் சில நேரங்களில் ஒருசில இரவுகள் கழிந்தும் வருவான். அம்மா எல்லோருக்கும் சாப்பாடு தருவாள். எல்லோரும் சிரித்துக்கதைத்து சந்தோசமாகச் சாப்பிடுவதைப் பார்த்து அம்மா சந்தோசப்படுவாள். இதுவழமையாகிப்போனது.

இப்படித்தான் ஒருநாள் அந்த நண்பர்களோடு புறப்பட்டுப்போனவன் திரும்பி வரவில்லை. "பயிற்சிமுகாமில நிற்கின்றான்'' என நண்பன் ஒருவன் வந்து சொன்னான். வீட்டில் எல்லோரும் அழுதார்கள். அம்மாவால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. அவளும் அழுதாள். இருந்தாலும் சமாளித்துக்கொண்டாள்.

தன்பிள்ளை எதுசெய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை.

அந்தத் தாய் அந்த இறுதி நாளை நினைத்துப் பார்க்கிறாள்.

"அது 'ஒபறேசன் லிபறேசன்' காலம்.

அந்த நேரம் இங்க எல்லா இடத்திலையும் ஆமி, அதனால இரவில நாங்கள் நேரத்தோடையே படுத்திடுவம். அண்டைக்கும் நாங்கள் படுத்திட்டம்.....''

''——...திடீரென வீடெல்லாம் அதிர – பெரிய ஒரு குண்டுச்சத்தம் எங்களைத் திடுக்கிட்டு எழுப்பிச்சுது. கொஞ்ச நேரம் சண்டை நடக்கிறதைப் போல சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. பிறகெல்லாம் அமைதியாகீட்டுது ——

பொடியள் நெல்லியடிப்பக்கம் ஆமிக்கு நல்லா அடி குடுத்திருக்கிறாங்கள் போல கிடக்கு' என்று எங்களுக்கை கதைச்சுப்போட்டு நாங்கள் படுத்திட்டம்.

அடுத்தநாள் காலையில நெல்லியடிப் பக்கம் இருந்து வந்த ஒருத்தர் ஊருக்குள்ள சொல்லி – அந்தக்கதை மெல்ல மெல்ல என்ர காதுக்கவந்தபோதுதான் தெரியும்...

முதல் நாள் வீட்டை உலுக்கி என்னை நித்திரையால திடுக்கிடவைத்த அந்த குண்டு சத்தம்... என்ர பிள்ளையும்...

அப்ப அழவும் ஏலாது எல்லாப் பக்கத்திலையும் ஆமி......


அறைக்குள்ள போயிருந்து எனக்குள்ள மட்டும் குமுறிக்குமுறி அழுதன்.

அயலாக்கள் பின்பக்கத்தால வந்து எங்களுக்கு ஆறுதல் சொல்லுவினம்.

றோட்டால ஆமி வாகனங்கள் வாற சத்தம் உறுமிக்கொண்டு கேட்கும் - மெதுவாக பின்பக்கத்தால கலைஞ்சுபோயிடுவினம்...... பிறகு வருவினம் ...

ம்......ம் என்ர மகன் செத்திட்டான் எண்டுறது எனக்கு கவலைதான் ஆனால். அவன் நாட்டுக்காகத்தானே செத்தவன், அதை நினைக்க பெருமையாத்தான் கிடக்கு.'' ○

## உறுதி



வெடிமருந்து வண்டியுடன் டாம்போ
கரும்புலி மேஜர் டாம்போ
(காசிப்பிள்ளை தயாபரன்)
முழங்காவில், மன்னார்.
17-08-1967 — 19-03-1991

"நான் திரும்பி வரமாட்டன். என்னால முடிந்தளவு உள்ளே சென்று முகாமின்சுவரோட மோதுவதுதான் நோக்கம்.''

சிலாவத்துறை இராணுவ முகாம்மீதான தாக்குதலுக்கு போராளிகள் தயாராகிக்கொண்டிருந்தபோது - தனது நணபனொருவனிடம் டாம்போ இப்படித்தான் சொன்னான்.

அந்த இரவும் வந்தது.

சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதல் ஆரம்பமானது சில மணித்துளிகளில், உதவி அரசாங்க அதிபர் விடுதியில் இருந்த சிறிய இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.

அந்தப்பக்கமாக இருந்த கொண்டச்சி வீதியால்தான், வெடிமருந்து நிரப்பப்பட்ட வண்டி இராணுவ முகாமினுள் செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வண்டி செல்வதற்காக, போராளிகள் வீதியைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த இடைநேரத்திலும் டாம்போ, தாக்குதலின் பொழுது காயமடைந்த போராளிகளைத் தூக்கி வருவதிலும் - சிகிச்சையளிப்பதிலும் ஈடுபட்டிருந்தான்.

வண்டி செல்வதற்குரிய நேரம் வந்தது.

டாம்போ வெடிமருந்து வண்டியின் அருகில் வந்தான். பக்கத்தில் நின்ற தோழனை இறுக அணைத்து முத்தமிட்டான்.

''நானும் கொஞ்சத்தூரம் வாறன்'' என்றான் அந்தத் தோழன்.

''வேண்டாம், ஏதும் தவறெண்டாலும் ஏன் வீணா எல்லோரும் சாவான்'' என்று சொல்லியபடி, வண்டியில் ஏறி இயக்கினான் டாம்போ.

வண்டியின் அருகே ஓடிவந்தபடியே ''விட்டுவிட்டு ஓடிவாலாம் தானே'' என்று தயங்கித் தயங்கிச் சொன்னான் ஒரு தோழன்.

வெடிமருந்து வண்டி உறுமிக்கொண்டு இராணுவ முகாமைத்தேடி ஓடியது. அந்த வண்டியை நோக்கி இராணுவத்தினரின் முழு ஆயுதங்களும் குறிவைத்து இயங்கின. குறித்த இலக்கிற்கு முன்பே அந்த வண்டி வெடித்து சிதறியது.

ஒளிப்பிழம்புடன் கரும்புகையொன்று வானில் எழுந்து கலந்தது. கடற்கரைகளில் - வயலவெளிகளில் - தூரத்துக் காட்டின் ஓரங்களில் நின்ற போராளிகளின் நெஞ்சங்களை வெடியோசை பாரமாக அழுத்தியது. அவர்கள் நேசித்த டம்போவின் வீரமரணச் செய்தியை, அந்த சத்தம் காதோடுவந்து சொல்லிச் சென்றது. ○

www.eelamview.com

www.eelamview.com



# நீங்காத நினைவுகள்

**1988** ஆம் ஆண்டுக் காலப்பகுதி ...... வினோத்தின் வீட்டை இந்தியப் படைகள் அடிக்கடி சுற்றிவளைத்தனர். அவனைத்தேடி இந்தியச் சிப்பாய்கள் அங்கு பாய்வது வழமையாகி விட்டது. அந்தஆபத்தான பொழுதுகளில், வீட்டுக் கூரைக்குள் ஏற்றி பெற்றோரால் அவன் மறைத்துக் காக்கப்படுவான்.

மேலேயிருந்து - "சயனைட்" குப்பியை பற்களுக்கிடையில் செருகிக்கொண்டு, எதனையும் எதிர்பார்த்து நொடிகளை எண்ணிக்கொண்டிருப்பான் வினோத்.

வினோத்தின் அக்கா 'சொல்கிறாள் -

"அந்த நேரத்தில் சின்னச்சின்ன 'கானு' களுக்குள்ள (கொள்கலன்) என்னவோ கொண்டுவந்து, வீட்டு மூலையளுக்குள்ள வைப்பான்.

'என்னடா உது' என்று கேட்டால், 'அதுக்குள்ள தண்ணியக்கா ......' எண்டிட்டுப் போயிடுவான்.

அவன் போனதுக்குப் பிறகு தூக்கிப் பார்த்தா, அது தண்ணியில்லை - இறுக்கமாக, பாரமாகக் கனக்கும் ...... எங்களுக்கும் அது என்னெண்டு தெரியேல்லை."

யாரும் எதிர்பாராத ஓர் அதிகாலைப்பொழுதில் - திடீரென வீட்டிற்குள் நுழைந்த இந்தியர்களிடம், வினோத் சந்தர்ப்பவசமாகச் சிக்கிக்கொள்ள நேர்ந்தது. வீட்டில் எல்லோரும் பார்த்து நிற்க துவைத்து எடுத்துவிட்டு, அவர்கள் அவனை இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

வினோத்தின் அப்பா சொல்கிறார் -

"அவனொரு பயங்கரச் சுழியனடா தம்பி ... அவனை இந்தியன் புடிச்சுக் கொண்டுபோய் காம்பில வைச்சிருக்கேக்க ஒரு நாள் ......வீட்டு விறாந்தையில கிடந்த வாங்கில படுத்திருந்தனான் - தற்செயலா மேல பார்த்தன், சிவரோட சேத்துப் பூட்டியிருக்கிற லைற்றின்ர கோப்பைக்கு மேலால, சாதுவா, கறுப்பா என்னவோ தெரிஞ்சுது ...... கதிரையைக் கொண்டுபோய் வைச்சிட்டு ஏறி எடுத்தனடாமோனை - அது ஒரு கிறனைட். அப்படியே நீண்டு எட்டிப் பாத்தன், பக்கத்த பக்கத்தை இருக்கிற நாலு லைற்றுக்கையும் கிறனைட் வைச்சிட்டுப் போயிருக்கிறான் ......"

இயல்பாகவே மற்றவர்களோடு நெருங்கிப் பழகி - அவர்களை மகிழ்வில் ஆழ்த்தக்கூடிய சுபாவம் கொண்டிருந்த வினோத்தின் அப்பா தன் பிள்ளைபற்றி பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தார்.

"இந்தியனிட்டை புடிபட்டு காங்கேசன்துறை காம்பில இருக்கேக்க - நாங்கள் அவனைப் பார்க்கப் போறனாங்கள். அங்கபோற நேரமெல்லாம், வீட்டில தான் வைச்சிட்டுப்போன சாமான்களைப்பற்றித்தான் தம்பி சொல்லுவான்...... எங்களைப்பற்றி இல்லை. அதுகளை பத்திரமா எடுத்து பெடியளிட்டை குடுத்துவிடோணும் எண்டிறதிலதான் அவன்ர கவனமெல்லாம் இருக்கும்."

இந்தியப்படை இங்கிருந்து வெளியேற்றப்பட்டபோது, ஏனையவர்களுடன் வினோத்தும் விடுவிக்கப்பட்டான்.

'தம்பி வந்திட்டான்' என எல்லோரும் மகிழ்ச்சியடைந்திருந்தபோது - 22 ஆம் நாள் வினோத் திரும்பவும் காணாமல் போய்விட்டான். அதன் பின் அவன் இடைக்கிடை வீட்டுக்கு வந்து போவான்.



**அம்மா அப்பாவோடு வினோத்.**

**இதன் பிறகு அவர்களுடைய செல்வத்தை அவர்கள் ஒருநாள்கூடக் காணவில்லை; இனிமேல் காணவும் மாட்டார்கள்.**

திரும்பவும் சிங்களப் படையினருடன் சண்டை ஆரம்பித்து சில நாட்களே நகர்ந்திருந்தன - ஒரு நாள் வினோத் வீட்டிற்கு வந்தான்.

வரிப்புலிச் சீருடையில், 'மிலிற்றறி' சப்பாத்துப் போட்டு ஒரு கையில் துப்பாக்கியுடன், மறு கையில் புகைப்படக் கருவி ஒன்றையும் கொண்டு வந்தான். வீட்டில் எல்லோருடனும் சேர்ந்து படம் எடுத்தான். அக்காமாரைக் கட்டிப்பிடித்தபடி ..... அக்காமாரின் குழந்தைகளைத் தோளில் வைத்தபடி...... ஆச்சியோடுநின்று...... எல்லாவிதமாகவும் படமெடுத்தான்.

"என்னடா புதினமாக இண்டைக்கு எல்லோரோடையும் படம் எடுககிறாய்?" அக்கா கேட்டாள்.

"ஒண்டுமில்லையக்கா...... நானொரு வேலையாய் தூர இடத்திற்குப் போறன் ... திரும்பி வரமாட்டன்......" சிரித்துக்கொண்டு சொன்னான்.

அண்ணனின் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு,

"உன்ர சித்தப்பா இனி வரமாட்டான்...... இறுக்கிக் கொஞ்சிவிடு......" என்று சொல்லிக் கொஞ்சினான்.

"எங்களுக்கு அது அப்போது அவ்வளவு விளங்கேல்லை."

வல்வெட்டித்துறையில் கடற்கரையோரமாக அவர்களுடைய வீடு இருந்தது. அங்கு பீரங்கிக் கப்பல்களின் தொடர்ச்சியான தாக்குதல்கள் நிகழும். இதன் காரணமாக, கொடிகாமம் சென்று அங்குள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த அம்மா அப்பாவையும் வினோத் சென்று பார்த்தான்.

கட்டி அணைத்துக்கொண்டு படம் எடுத்தான்.

அம்மா கேட்டபோது - அக்காவுக்குச் சொன்ன அதே காரணத்தை இங்கேயும் சொன்னான். அவர்களாலும் வித்தியாசமாக எதனையும் உணர முடியவில்லை.

"நேவி அடிக்கிறானெண்டு அலைஞ்சுதிரியாதையுங்கோ அம்மா...... ஊரிலபோய் இருங்கோ ...... ஒருநாளைக்கு...... எங்கட கடல் எங்களிட்டை வரும்" என்றும் சொல்லிவிட்டுப்போனான்.

அதன் பிறகு ஒருநாள்கூட தங்களுடைய செல்வத்தை அவர்கள் காணவில்லை; இனிமேல் காணவும் மாட்டார்கள்.

இப்போதும் வினோத்தின் அம்மா, அவனைத் துயரத்தோடு நினைவுகூருகிறார்.

"சின்னவனாய் இருக்கேக்க, என்னைவந்து கட்டிப்பிடிச்சுக்கொண்டு 'அண்ணை அக்காமார் எல்லாரும் கலியாணம் செய்து போனதுக்குப்பிறகு, அம்மாவையும் அப்பாவையும் நான்தான் பார்ப்பன' எண்டு சொல்லுவானடா தம்பி......"

# கரும்புலிகளின் வாழ்வில்...

## இறுதி விருப்பம்

**1987** இன் ஆரம்பம். அப்போது காந்தரூபன் தொண்டைமனாறு சிங்களப்படைமுகாமைச் சுற்றியிருந்த காவலரணில் கடமையில் இருந்தான்.

ஒரு நாள் முகாமிலிருந்து சிங்களப்படையினர் வெளியேறிய போது சண்டை தொடங்கியது. அச் சண்டையின் ஒரு சந்தர்ப்பத்தில், எதிரியின் கையில் உயிருடன் பிடிபட்டுவிடக்கூடிய சூழ்நிலை உருவாகியபொழுது. காந்தரூபன் குப்பியைக் கடித்துவிட்டான்.

ஆனால், அதிர்ஷ்டவசமாக சக தோழர்களால் மீட்கப்பட்டு காப்பாற்றப்பட்டான்.

இருந்த போதும் - சயனைட் விசம் காந்தரூபனின் உடலில் ஒரு உட்பாதிப்பை உண்டாக்கியிருந்தது. இந்த உட்பாதிப்பிற்கான பராமரிப்பு முறைகளில் அத்தியாவசியமானதாக நிறை உணவு அருந்த வேண்டுமென, மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

1988, 1989 காலம். இப்போது காந்தரூபன் தலைவர் அவர்களுக்குப் பக்கத்தில் மணலாற்றுக் காட்டில் நின்றான்.

காந்தரூபனிற்கு இப்போதும் நிறை உணவு தேவைப்பட்டது.

ஒரு பசுமாடு இருந்தால் காந்தரூபனிற்குப் பால் எடுப்பதுடன் - சுகவீனம் அடைகின்ற போராளிகளுக்கும் பால் கொடுக்க முடியும் எனக் கருதிய தலைவர், வெளியிலிருந்து பால்தரக்கூடிய நல்ல இனப் பசு ஒன்றை, காட்டுக்குள் இருந்த தளத்திற்குக் கொண்டுவருமாறு சொன்னார்.

பசு வந்து சேர்ந்தது.

தலைவரின் துணைவியார், ஒரு தாயைப்போல இருந்து பால் காய்ச்சிக் கொடுத்தார்.

அந்தப் பொழுதுகளிலெல்லாம் காந்தரூபன் நெஞ்சநெகிழ்ந்து நிற்பான். தான் ஒரு கதியற்றவன் என்ற கவலையே அற்றுப்போகும்.

ஒரு நாள் அன்பு கலந்த மரியாதையோடு, காந்தரூபன் தலைவருக்குப் பக்கத்தில் வந்தான். பாசத்தோடு அவனை அழைத்து அருகில் இருத்திக் கதைத்தார் தலைவர்.

"அண்ணை .... என்னை கரும்புலிகளில சேர்த்துக்கொள்ளுங்கோ..." என்றான்.

அதோடு தனது உள்ளத்துக்குள் உறைந்துகிடந்த இன்னொரு விருப்பத்தையும் அவன் தலைவரிடம் சொன்னான்.

"உங்களுக்குத் தெரியும் அண்ணை, நானொரு 'அநாதை'. அப்பா இல்லாம அம்மா இல்லாம ஆருமே இல்லாம அலைஞ்ச என்னை- ஒரு அப்பாவும் அம்மாவும் எடுத்து, தங்கட பிள்ளையைப் போல வளத்தினம்.

......அதுக்குப்பிறகு நான் இயக்கத்துக்கு வந்தன். நீங்கள் என்னை அன்போடையும், பாசத்தோடையும் ஆதரிச்சு வளர்த்தியள். நான் வருத்தங்களால வாடேக்கை எனக்கு வேண்டிய எல்லாத்தையும் செய்து கவனிச்சியள் ......"

"இப்ப நான் உங்களிட்டை ஒண்டு கேட்கப் போறன் அண்ணை. தயவு செய்து எனக்காக நீங்கள் அதைச் செய்யவேணும்......"

அவனுக்கருகில் இருந்து அவன் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் தலைவர்.

"என்னைப்போல எத்தனையோ பொடியள் இந்தநாட்டில அநாதைகளா வாழுறாங்கள் ..... அப்பா அம்மா இல்லாம, சொந்தக்காரரின் ஆதரவில்லாம அலைஞ்சு திரியிறாங்கள். வாழ இடமில்லாம, படிக்க வசதி இல்லாம, எவ்வளவோ ஏக்கங்களோடையும் துன்பங்களோடையும் அவங்கள் இருப்பாங்கள் எண்டிறதை, நான் அனுபவத்தில கண்டனான் அண்ணை......"

"நீங்கள் என்னை அன்போட கவனிச்சுப் பார்த்ததைப் போல அவங்களையும் கவனிக்க வேணும். அவங்கள் எந்தக் குறையுமில்லாமல் வளரவும் நன்றாகப் படிக்கவும் வசதி செய்து கொடுங்கோ. அவர்களுக்கெண்டு ஒரு இடத்தை அமைச்சு, அங்கைவச்சு அவங்களையெல்லாம் வளத்தெடுத்து - அவங்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் குடுத்துவிடுங்கோ அண்ணை......"

தலைவரின் இதயத்தை இது தொட்டது. அப்படியான ஒன்றின் தேவை பற்றி எண்ணியிருந்த தலைவருக்கு காந்தரூபனின் வேண்டுகோள் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அவ்வாறான இல்லமொன்றை ஆரம்பித்து- காந்தரூபனின் நினைவாக, அதனை அவனது பெயரிலேயே செயற்படுத்தத் தான் எண்ணியுள்ளதாக, தலைவர் கூறுகின்றார்.

அதற்குரிய ஏற்பாடுகளிலும் தலைவர் ஈடுபட்டுள்ளார்.

www.eelamview.com

www.eelamview.com



# கடலலை மீதினில் கரும்புலிகள்.

பலர் கருதுவது போல எமது வாழிடமான நிலப்பகுதி மட்டும்தான் தமிழீழத் தாயகம் அல்ல.

பழமையும்- பெருமையும்-செழுமையும் கொண்ட தமிழீழக் கடலும் தமிழர் தாயகம்தான்.

எமது விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை எமது கடலிற்கும் முக்கிய பங்குண்டு.

விநியோகங்களுக்கும், போக்குவரத்திற்கும், வெளி உலகத் தொடர்பிற்கும் இக்கடலே பிரதான பாதையாக இருந்துவருகிறது.

இதை நன்கு அறிந்த சிங்கள அரசு கடற் பயணங்களைத் தடுத்து, வீடுதலைப் போராட்டத்தை நசுக்கத் திட்டமிட்டது.

அதன்பிரகாரம் 1984ஆம் ஆண்டு திரு. லலித் அத்துலத்முதலி பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற பின், இந்தக் கடல் எமதும் எமது மக்களினதும் பாவனையிலிருந்து தடைசெய்யப் பட்டது.

'கடல் கண்காணிப்பு வலையம்' என்ற பெயரில் தமிழீழக் கடல் சிங்களக் கடற்படையால் ஆக்கிரமிக்கப் பட்டது.


இந்த கண்காணிப்பு வலையத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில், தமிழீழக் கடலில் நிரந்தரமாகச் சில கப்பல்கள் நங்கூரமிட்டன. இவை தாய்க்கப்பல்கள் அல்லது கட்டளைக் கப்பல்கள் என அழைக்கப்பட்டன. சாதாரண சரக்குக் கப்பல்களை கடற் கண்காணிப்புக்கு ஏற்றபடி சிறு மாற்றங்களைச் செய்து, சில சாதனங்களையும் பொருத்தி, அவற்றைக் கட்டளைக்கப்பல்களாக சிங்கள அரசு மாற்றியுள்ளது. றேடர் சாதனங்களும், சிறுரக பீரங்கிகளும், கனரக இயந்திரத் துப்பாக்கிகளும் இதில் பொருத்தப் பட்டுள்ளன. இந்தக் கப்பல்களின் பணி, கடலில் தமிழர்களின் படகுகள் எவையாவது தென்படுகின்றனவா என்பதை வேவு பார்ப்பதும், அப்படித் தென்பட்டால் அந்தச் செய்தியை கடற்படையின் அதிவேக விசைப் படகுகளுக்கு அறிவித்து குறித்த படகுகளை மூழ்கடிப்பதுமாகும்.

இவ்விதம் இக்கட்டளைக் கப்பல்கள் தமிழீழக்கடலில் நங்கூரமிட்ட பின், கடலில் பயணம்போன நூறுக்கும் மேற்பட்ட புலிவீரர்கள் கடலிலே வீரச்சாவடைந்தனர். 14. 04. 1985 அன்று, புலிகள் இயக்கம் கடலிலே தனது முதலாவது இழப்பைச் சந்தித்தது. அதில் 14 புலிகள் வீரச்சாவடைந்தனர். அத்துடன் பல நூற்றுக்கணக்கான மீனவர்களும் பிரயாணம் செய்த மக்களும் கடலிலே பலியானார்கள். இந்த இழப்புகளுக்கெல்லாம் சூடாநாட்டைச் சூழவுள்ள கடலில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு கட்டளைக் கப்பல்களே மூலகாரணியாகும். 'அபித்தா', 'எடித்தாரா' என்று பெயர் சூட்டப்பட்ட இந்த இரண்டு கப்பல்களில் ஒன்று காங்கேசன்துறைக்கும் - பருத்தித்துறைக்கும் இடையில் உள்ள கடலில் நிறுத்தப்பட்டிருக்கும். மற்றையது வெற்றிலைக் கேணிக்கு நேரே நிறுத்தப் பட்டிருக்கும். இந்த இரண்டு கப்பல்களையும் அப்புறப்படுத்தாவிட்டால் தொடர்ந்தும் புலிவீரர்களை இழக்க நேரிடும் என்பதுடன், போராட்டப் பணிகளும் பெருத்த சிரமங்களையும் தடைகளையும் எதிர்கொள்ளும்.

ஆனால், புலிகள் இயக்கத்திடமிருக்கும் சிறிய படகுகளின் உதவியுடன் இக்கட்டளைக் கப்பல்களை அடித்து விரட்ட முடியாது. எனவேதான் கரும்புலித் தாக்குதல்கள் மூலம் அந்த, 'கடல் திமிங்கலங்களை' அகற்றப் புலிகள் தீர்மானித்தனர்.

10. 07. 1990 அன்று, வடமராட்சிக் கடலில் நங்கூரமிட்டிருந்த 'எடித்தாரா' என்ற பெயருடைய கட்டளைக் கப்பல் மீது, ஒரு கரும்புலித்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகிய கரும்புலிகள் பங்கேற்றனர்.

இதைப்போன்று 4-5-1991 அன்று, 'அபித்தா' என்ற பெயருடைய கட்டளைக்கப்பல் மீது ஒரு கரும்புலித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இத்தாக்குதலை கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம்ஆகிய கரும்புலிகள் செய்து முடித்தனர். 'அபித்தா' கப்பல் முற்றாகச் சேதமாக்கப்பட்டது; கடற் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு, இப்போது திருகோணமலைத் துறைமுகத்தில் கைவிடப்பட்டுள்ளது.



சிறீலங்கா கடற்படையின் கட்டளைக் கப்பல்; இதுவே கடற்கரும்புலிகளால் முற்றாகச் சேதமாக்கப்பட்டது.

## பற்று

"நீங்கள் முன்னால போங்கோ, நான் பின்னால வருவன்."

கரும்புலியாகச் செல்கின்ற புலிவீரர்களுக்கு, தலைவர் அவர்கள் கடைசியாக இப்படிச் சொல்லித்தான் வழியனுப்பிவைப்பார்.

இது வெறுமனே அவரது வாயிலிருந்து வருகின்ற வார்த்தை அல்ல; அந்த மாபெரும் தலைவரின் ஆத்மாவிலிருந்து எழும் குரல் அது.

"உண்மையிலேயே என்றோ ஒருநாள் இதுதான் நடக்கும்" என்று உறுதியோடு தன்னுள் சொல்லி நிற்பவர் எம் தலைவர்.

கரும்புலி நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளச் செல்கின்ற எங்கள் தேசத்தின் குழந்தைகள் அதற்குப் போவதற்கு முன்னதாக ஒரு நாளில், தலைவர் அவர்கள் தனது பொழுதுகளை அவர்களுடன் கழிப்பார்; இதனை அவர் எப்போதும் செய்வதுண்டு.

இப்படித்தான், கடலில் நாம் நடாத்திய முதலாவது கரும்புலித் தாக்குதலை நிறைவேற்றிய கடற்புலி வீரர்களான காந்தரூபன், கொலின்ஸ், வினோத் ஆகியோர் முதல் நாளை தலைவரவர்களுடன் வாழ்ந்தார்கள்.

இவர்கள் நெஞ்சைத் திறந்து பழகினார்கள். எல்லாவற்றையும் பற்றிக் கதைத்தார்கள். பகடிகள் சொல்லிச் சொல்லி சிரித்து மகிழ்ந்தார்கள். தலைவரோடு ஒன்றாக இருந்து சுவைத்துச்சாப்பிட்டார்கள். அவரோடு சேர்ந்து நின்று விதம்விதமாகப் படமெடுத்தார்கள். தங்களது உள்ளக் கிடக்கைகளை எல்லாம் - உணர்வுகளை எல்லாம் - பகிர்ந்து கொண்டார்கள்.

கடைசியில் - தலைவரிடமிருந்து அவர்கள் விடைபெறுகின்றபோது - சோகம் கலந்த பெருமிதத்தோடு அவர்களைக் கட்டியணைத்து வழியனுப்பி வைக்கையில், அந்தத் தலைவனின் குரல் உறுதியோடு ஒலித்தது -

"நீங்கள் முன்னால போங்கோ, நான் பின்னால வருவன்."

தலைவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு வெளியில் வந்தவுடன், அங்கு நின்ற நண்பன் ஒருவனிடம் காந்தரூபன் சொன்னான் -

"இவர் வரவேணும் என்பதற்காகவா மச்சான் நாங்கள் போறம்?" - அவ்வளவுக்கு உரமேறிய உள்ளங்கள்.

www.eelamview.com

www.eelamview.com



# கரும்புலிகளின் வாழ்வில்...

## மகன்

"ஒரு நாள் தொழிலுக்குப் போறதுக்கான ஒழுங்குகளைப் பார்க்க நான் கடற்கரைக்குப் போனன். கரையில ஊர்ச்சிறுவர்களோட புதுசா ஒரு பையனும் நிண்டுகொண்டிருந்தான். ஒரு கிழிஞ்ச பெனியன் போட்டுக்கொண்டு, மெலிஞ்ச உடம்போட அவன் இருந்தான். அவனைக் கூப்பிட்டு,

''நீ ஆர் தம்பி? எங்க இருந்து வாறாய்?'' என்று ஆதரவோட கேட்டன்.

உடனேயே அவனுக்கு இரண்டு கண்களும் கலங்கிப்போச்சுது. 'எனக்கு ஒருத்தருமில்லை...... அம்மா அப்பா எல்லாம் செத்துப் போச்சினம் ..... சொந்தக்காரர் ஆருமில்லை ..... இப்படியே நடந்து நடந்து இந்தக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தன்' என்றான்."

காந்தரூபனை தனது சொந்த மகனைப்போல எடுத்து, பாசத்தோட வளர்த்த அவர், அவனின் கதையைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

"கலியாணம் செய்து நீண்ட காலமாக எங்களுக்கு குழந்தை கிடைக்கேல்லைத் தம்பி ... ஆரிட்டையாவது ஒரு குழந்தையை எடுத்தாவது வளப்பம் எண்டு நாங்கள் நினைச்சுக்கொண்டிருந்தம் ....

அந்த நேரத்திலதான் தம்பி எங்களிட்ட வந்தான். அவனை வீட்டுக்குக் கூட்டிவந்து - சொந்தப் பிள்ளையாக வளர்த்தம்......''

"இது நடந்தது பதினைஞ்சு வருசத்துக்கு முந்தி ..... அதுக்குப் பிறகு காந்தரூபன் வளந்து பெரியவனாகி, பின் இயக்கத்துக்குப் போனான்...''

அவர் மனதைத் திறந்து கதைத்துக்கொண்டிருந்தார்.

"நான் கடற் புலியளுக்கு ஓட்டியாய் போறனான். வண்டியில நாங்கள் பொடியளையோ, சாமான்களையோ கொண்டுவாற நேரங்களில கனதரம் நேவியால கலைபட்டிருக்கிறம். இப்படி நாங்கள் போய் வாறதுகள்பற்றி தகவல்சொல்கிற பெரிய கப்பல் நடுக்கடலில நிக்கும். அந்தக்கப்பல் எடுக்கிற தகவல்கள் தான் நாங்கள் கடலில பறிகொடுத்த அத்தனை பொடியளின்ர சாவுக்கும் காரணம்.''

''அந்தத் தாய்க்கப்பல எங்கட பொடியள் அடிக்கப்போறாங்களாம் எண்டு கேள்விப்பட்டன். அந்தக் கப்பல அடிக்கிறதுக்கு கரும்புலியாப் போற பையங்களில எங்கட காந்தரூபனும் ஒரு ஆளாம்எண்டிறதையும் நான் அறிஞ்சன்.''

எங்களுடைய முகத்தை ஊடுருவிப் பார்த்துவிட்டுச் சொன்னார். ''உடனே தாங்கிக்கொள்ள எனக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.''

அவருடைய நா தழுதழுத்தது. சோகம் தொண்டையை அடைக்க அவர் தொடர்ந்தார்-

''கடைசியா அவன் கரும்புலியாய்ப் போகும்போது,நானும்கடற்கரையில நிண்டன். அவனை நான் எந்த இடத்தில முதன்முதலில்கண்டு தூக்கி வளர்த்தனோ, அதே கடற்கரை.

படகில ஏறப்போறதுக்கு முதல் என்னட்ட ஓடிவந்தான். கட்டிப் பிடிச்சு மாறிமாறி கன்னத்தில கொஞ்சினான்.

'அநாதையா வந்த என்னை ஆளாக்கினியள் அப்பா' எண்டான்.

'உங்களுக்கு ஒண்டு ஞாபகமிருக்கோ' எண்டான்.

'இந்தக் கடற்கரையில இந்த இடத்திலதான் உங்களுக்கு நான் மகனானனான். இண்டைக்கு அதே இடத்தில, உங்களை விட்டிட்டுப் போறன்' எண்டு சொல்லிப் போட்டு போனான் தம்பி.''

திறந்திருந்த கதவொன்றைச் சுட்டிக்காட்டி ''அதுதான் எங்கட சாமி அறை. அந்தத் தெய்வத்தின்ர படத்திற்குப் பக்கத்திலதான் அவன்ர படத்தையும் வைச்சிருக்கிறம்'' என்றார்.

''தன்ர சொந்த அப்பாவின்ர பேர் அவனுக்குத் தெரிஞ்சிருந்தும், இயக்கத்தில விபரங்களைப்பதியேக்க 'யோகராசா' எண்டு என்னைத்தான் தன்னுடைய, அப்பா எண்டு பதிஞ்சிட்டுப் போயிருக்கிறான்.. ...ம்.''

அவருடைய கண்கள் கலங்கிப் போயின. தனது சால்வையால் கண்களை ஒற்றிக்கொண்டார். அருகிலே நின்ற அம்மாசொன்னா

''அன்றைக்கு முழுவதும் இவர் ஒரு மாதிரியா இருந்தார். நான் ஒண்டும் கேக்கேல்லை. பின்னேரம், கடலில பொடியள் கரும்புலியாய்ப் போய் கப்பலடிக்கப் போறாங்களாம் எண்டு, பாத்திட்டுவாறனெண்டு போனார். காந்தரூபனும் போகப்போறான் எண்டு இவர் சொல்லவில்லை. இரவானதும் எனக்கு நித்திரை வர மாட்டனெண்டிட்டுது, சத்தத்தையாவது கேப்பமெண்டு வீட்டுவாசலில் இருந்தன்.

கொஞ்ச] நேரத்தில் கடலதிரச் சத்தங்கேட்டது. நான் வாசலிலேயே இருந்தன். சாமம் ஒரு மணியளவில இவர் ஒரு மாதிரியாக, சோர்ந்து போய் வந்தார்.''

"வீட்டுக்குள்ள வந்தவர்-'எங்கட காந்தருபனும் கரும்புலியாப் போனவன்' என்று சொல்லிப்போட்டு அழுதார். நான் ஏங்கிப்போனன். என்னால தாங்கிக்கொள்ளேலாம இருந்தது... நானும் சேர்ந்து அழுதன்.''

யோகராசா அண்ணரும், மனைவியும் பிற்காலத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்றார்கள் - அவர்கள் தங்களுக்கு நான்கு குழந்தைகள் என்று சொல்கின்றார்கள். தங்களுடைய முதல்மகன் 'கோணேஸ்வரன் (காந்தரூபன்) என்கிறார்கள்.

அவர்களுடைய மூத்தமகன் கரும்புலியாகி கடலிலேகாவியமாகியபின், அவர்களுடைய நான்காவது மகன் பிறந்தான்,

இப்போது கைக்குழந்தையான அவனைத் தூக்கி தோளில சாய்த்தபடி அந்தத் தாய் சொல்கிறாள்- ''காந்தரூபனா நினைச்சுத்தான் இவனை நான் வளக்கிறன்.''

இந்தத் தாயுடன் கூடவே அவரது தமக்கையாரும் இருந்தார். அதே உணர்வு. சின்ன வயதுமுதல் காந்தரூபன் மீது அன்பு செலுத்திய இந்தப் பெரியம்மாவும் சேர்ந்து, கடந்தகாலத்தை நினைவுகூர்ந்தார்.

''சின்ன வயதில காந்தரூபன் என்ர பிள்ளையளோட சேர்ந்து தான் விளையாடித் திரிவான்.படிக்கிறதெண்டா அவனுக்குச் சரியான கள்ளம்.என்ர மகள் அவனைக்கூட்டிக்கொண்டு வந்து இருத்தி, எழுதக் கற்றுக்கொடுப்பாள்.

'அ' எழுதி, 'ஆ'எழுதி.'இ' எழுதும்போது, 'இதென்ன கணக்க சுழி போடவேண்டியிருக்கு... எழுதுப் படுகுதில்லை' எண்டு சொல்லி கொப்பியைத் தூக்கி எறிஞ்சு போட்டு ஓடிவிடுவான் .....'

"அப்படிப்பட்டவன், பிறகு இயக்கத்துக்குப்போய் கொஞ்சக்காலத்தால திரும்பிவரேக்க பெரிய அறிவாளியாக இருந்தான். பெரிய அரசியல் மேதைகளைப் போல எங்களுக்கெல்லாம் விளக்கம் தருவான். அந்தளவுக்கு அவனை இயக்கம்தான் வளர்த்துவிட்டது.''

பெரியம்மா தொடர்ந்து சொன்னார் ''கப்பலடிக்கிறதுக்குப் போறதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னர் சரியான வெயிலுக்கை வீட்டுக்கு வந்தான். 'தலையிடியாக் கிடக்கு பனடோல் தாங்கோ' என்றான்.

குடுத்தன்.

வாங்கிக் குடிச்சான்.

'நான் ஒரு முக்கியமான வேலையா வேற ஒரு இடத்துக்குப் போறன் பெரியம்மா' என்றான்.

வருத்தம் என்று சொல்லுறாயேடா தம்பி..... தலைவரிட்ட சொல்லிப்போட்டு நில்லன்...... இன்னொருதரம் போகலாம்தானே! என்டு ஆலோசனை சொன்னேன்.

'இல்லைப் பெரியம்மா! அந்த வேலைக்குப் போகப்போறன் எண்டு நானாத்தான் அவரிட்டைக் கேட்டனான்...... கட்டாயம் நான்தான் அந்த வேலைக்குப் போகோணும்..... ' என்றான்

'சரிதம்பி .. சுகமாய்போய் சுகமாய் திரும்பி வா' எண்டு நான் சொல்ல - அவன் திருப்பிச் சொன்னான்-

'சுகமாய் போவன் பெரியம்மா .. அதில பிரச்சினையில்ல .... ஆனா திரும்பி வாறதென்கிறதுதான்...... சரிபாப்பம் ... எண்டான்.'

அதற்குமேல் பெரியம்மாவால் பேசமுடியவில்லை.மறுபக்கம் திரும்பி கண்களைத் துடைத்துக்கொண்டார்.



**கரும்புலி மேஜர் காந்தரூபன்**

யோகராசா கோணேஸ்வரன்
வல்வெட்டித்துறை.
பிறப்பு: 09-10-1971 வீரச்சாவு: 10-07-1990

## ஒரு மென்மையான இதயம்

"மன்னாரில நடக்கிற முதல் கரும்புலித் தாக்குதலை நான்தான் செய்யவேண்டும். ''

தளபதி சுபனிடம் டாம்போ இந்த வேண்டுகோளை முன்னரே விடுத்திருந்தான்.

அதனை அவருக்கு அடிக்கடி நினைவுபடுத்திக்கொண்டுமிருந்தான்.

சிலாபத்துறை படைத்தளம் மீதான தாக்குதல் திட்டம் தயாரிக்கப்பட்ட போது, அங்கு கரும்புலித் தாக்குதலை நிகழ்த்துவது டாம்போ எனத் தீர்மானிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு சில நாட்களுக்கு முன்னதாக -

அந்தக் காட்டு முகாமின் உயர்ந்த மரமொன்றின் நிழலில் - அதன் அடிவேரில் சாய்ந்திருந்தபடி - நண்பனொருவனுக்கு டாம்போ தன் வீட்டுக்கதையைச் சொன்னான்.

'' வீட்டில் நான்தான் மூத்த பிள்ளை. இரண்டு தம்பிமாருக்குப் பிறகு கடைசியாகத் தங்கச்சி பிறந்தாள். நான் சின்ன வயசாக இருக்கும்போதே அப்பாவுக்கு இயலாமல் போய்விட்டது. அம்மா தான் கஸ்டப்பட்டு - கூலி வேலை செய்து- எங்களை வளர்த்தா. நான் கொஞ்சம் வளர்ந்ததும் அம்மாவின் சுமைகளைப் பகிர்ந்துகொள்ளத் துவங்கினனான். நாங்கள் எல்லாரும் பாசத்தோட பிணைஞ்சு வளர்ந்தம். ஐந்து வருடங்களுக்கு முன்னம் எனக்குப் பதினெட்டு வயதாக இருக்கும்போது - நாட்டு நிலைமை என்னைப் போராட்டத்துக்குள்ள இணைச்சிது ...... அது எல்லோருக்கும் இருக்கிற கடமையும் தானே ... ''

'' இதுக்குப்பிறகு ஒரு சண்டையில காயப்பட்டு, சிகிச்சைக்காக தமிழ்நாட்டுக்குப் போயிருந்தன். அங்குவைத்து, ஏனைய தோழர்களோடு கைதுசெய்யப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டு, வவுனியா இந்தியப்படை முகாமில் வைக்கப்பட்டிருந்தன் ...... சிறைக்குள்ளே இருந்த காலத்தில், இந்தியப் படைக்கெதிரான போரில் என்னால் பங்கேற்க முடியவில்லையே என்ற துயரத்தில மனது துடித்தது ...... அங்கையிருந்து சிறையை உடைத்து போராளிகள் வெளியேறும்போது நானும் வந்தன் - அந்த முயற்சியில காலில காயப்பட்டன் ''

'' வீட்டில், நாங்கள் எல்லோருமே எங்களுடைய ஒரேயொரு தங்கச்சியில் மிகுந்த அன்பு வைச்சிருந்தம். அவளின் சாமத்திய வீட்டை சொந்தக்காரர் எல்லோருக்கும் சொல்லி வீட்டில் - எங்களின் வசதிக்கேற்ற அளவுக்கு பெரிசாகச் செய்தம் .. ... ஆனால்

...... சாமத்திய வீடு நடந்து பத்தாம் நாள், தம்பிக்கும் தங்கச்சிக்கும் இடையில் சின்னதாக ஒரு பிரச்சனை. அம்மா தம்பிக்கு அடிச்சுப்போட்டா ...... தன்னாலதான் அண்ணனுக்கு அடிவிழுந்ததென்று நினைத்து ...... எங்களின் ஆசைத் தங்கச்சி நஞ்சு குடிச்சு உயிரைப் போக்கிக்கொண்டாள் ---..."

ஒருகையால் கண்களைத் துடைத்துக்கொண்டு - கீழே குனிந்தபடி ஒரு தடிக்குச்சியால் மண்ணைக் கிண்டிக்கொண்டு, டாம்போ சொன்னான் -

''இதற்கிடையில் எங்களின் இன்னொரு தம்பி பயணம் போனவன், கடற்படையால கைதுசெய்யப்பட்டான். இன்னும் வீட்டுக்கு வரவில்லை. இராணுவம் பிடித்துச் செல்கின்ற ஆக்கள் காணாமல் போவதென்பது இங்கு புதினமில்லைத்தானே ...

..... அதுக்குப்பிறகு - தங்கச்சி செத்து ஒரு மாதம் போகமுந்தியே தம்பி இயக்கத்திற்கு வந்திட்டான். எங்களுடைய வீட்டு நிலைமையை தெரிஞ்சுகொண்ட சுபன் அண்ணை, தம்பியை வீட்டுக்குப்போகச் சொல்லி அனுப்பினபோதும், போகமாட்டன் என்று அடம்பிடித்துக்கொண்டு முகாம் ஒன்றில் நிண்டான் ...

......பிறகு நான்தான் அவனை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டுவந்து பயிற்சிமுகாமில் விட்டன்...... இப்ப அவன் அங்கு ஓடித்திரிகிறான்...... நான் கரும்புலியாகப் போகப்போகிறேன் என்று அவனுக்குச் சொல்லிப் போட்டன்......'' என்ர முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டு வேறெங்கோ பார்த்தான்.

''மன்னாரில நடக்கிற முதலாவது கரும்புலித் தாக்குதலை - நான் செய்ய வேணுமென்ற ஆசை என்னிடம் இருந்தது ... அதை நான் சுபன் அண்ணையிட்டச் சொல்லியிருந்தனான் ... இப்ப அந்த நாளும் வந்திருக்குது ......''

கலக்கமில்லாத - மிகத்தெளிவான - கண்களோடு தோழனைப் பார்த்துச் சொன்னான் -

"இப்படி ஒரு நிறைவான சாவு எல்லாருக்கும் வராதடா ......''

www.eelamview.com

www.eelamview.com



# ஒரு வீரனின் ஆசை


வன்னிப் பிராந்தியத்தின் மையத்தில் - அதன் இருதயத்தில்- மாங்குளம் சிங்களப் படைமுகாம் இருந்தது.அது அங்கு பல அட்டூழியங்களைச் செய்து வந்தது.

இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய நாட்களிலிருந்து இம் முகாம் புலிகளால் முற்றுகையிடப் பட்டிருந்தது.

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள இப்படைமுகாம் மீது தாக்குவதற்கான திட்டம் தயாரிக்கப்படுகிறது. அப்படை முகாம்மீது கரும்புலித் தாக்குதல் நடாத்தி அதைக் கைப்பற்றுவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை தலைமை தாங்கி வழிநடாத்திய தளபதி பால்ராஜ் சொல்லும்போது, ''நாங்கள் இம் முகாம் தாக்குதலுக்கான திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தோம். அப்பொழுது 'மாங்குளம் முகாமைப் பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும்.எனவே நான்தான் சக்கை லொறி கொண்டு போகவேணும்' என, 'போர்க்' சொன்னான்.

அந்தக் குரலில் உறுதி தெரிஞ்சுது......போர்க் போராட்டத்திற்கு புதியவரல்ல, அவர் மாவட்டப் பொறுப்பாளராக இருந்தவர். பல தாக்குதல்களை முன் நின்று வழி நடத்தியவர்.''



வெடிமருந்து வண்டியில் சிரித்த முகத்தோடு போர்க்.

**''மாங்குளம் முகாமைப்பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும்; அதனால், நான் தான் சக்கை லொறி கொண்டுபோகவேணும்''.**

தளபதி பால்ராஜ் மேலும் தொடர்கையில்......

''1990ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ஆம் நாள்.......

அண்டைக்குத்தான் போர்க் கரும்புலியாப் போனவர். புறப்பட முன் கடைசியாக என்னைக் கட்டியணைச்சு 'நான் புறப்படுறன்...... இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது... ' என்று சொல்லிப்போட்டு, வெடிமருந்து வாகனத்தை ஓட்டிச் சென்றார். கொஞ்ச நேரத்தில பெரிய வெடிச்சத்தம் கேட்டுது; முகாம் தகர்ந்தது...... பிறகு சில மணி நேரத்தில முகாம் கைப்பற்றப்பட்டது '' என்றார்.

இந்தத் தாக்குதலுக்குச் சில நாட்களுக்கு முன்பு, போர்க் அண்ணை விடுமுறையில் வீட்டுக்குச் சென்றார்.

அவரது கிராமம் சிங்கள எல்லையில் அமைந்துள்ளது. அது வன்னியிலுள்ள சேமமடு.

சிறு வயதுதொட்டு நடந்து திரிந்த அக் கிராமத்தில் குளம். வயல், காடு...என்று ஒவ்வொன்றையும் சுற்றி ரசித்தார். இல்லை... அவற்றிடமிருந்து விடைபெற்றார்.

அந்த நாட்களில் ஒருநாள் பக்கத்துவீட்டுச் சிறுவர்கள் மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவ்விடத்திற்குச் சென்று ஓர் மரக் குற்றியில் அமர்ந்தவாறு போர்க் அண்ணை கேட்டார்-

''தம்பியவை, மாவீரர் நாள் வருதல்லோ?, தற்செயலா நான் செத்துப் போனா அண்டைக்கு என்ன செய்வியள்?''

''நீங்கள் ஏன் சாகப்போறியள்'' எனக் கேலியாகப் பதில் கூறினர் பிள்ளைகள்.

போர்க் அண்ணையும் சிரித்தபடி, ''தப்பித்தவறி நான் செத்துப் போனா என்ர நினைவா ஆளுக்கொரு மரம் நட்டு வளவுங்கோ என்ன......?''

அவர்கள் சிரித்தனர். போர்க் அண்ணையும் சேர்ந்து சிரித்தார்.

வீட்டிலிருந்து புறப்படும் இறுதி நாள் வந்தது. மதியம் உணவருந்தி விட்டு விறாந்தையில் பாயைப் போட்டுப் படுத்தார். சற்றுத்தள்ளி போர்க் அண்ணையின் அம்மாவும் படுப்பதற்காக, தரையில் பாயைப் போட்டார்.

''அம்மா இதில வந்து, எனக்குப் பக்கத்தில பாயைப் போடணை.'' போர்க்கண்ணை கேட்டார். அம்மாவும் [வந்து அவரின் தலையை வருடியவாறு இருந்தார்.

அன்று பின்னேரம் அப்பா, அண்ணன்மார், தம்பிமார், அன்புத் தங்கை......என்று எல்லோரிடமும் விடைபெறுகிறார்.

கடைசியாக தாயாரிடம் வந்து, ''அம்மா எனக்கு உங்கட கையால ஒரு பொட்டு வைச்சுவிடுங்கோவன், ஆசையாயிருக்கு'' என சாதாரணமாகக் கேட்டார். ஏதுமறியாத தாயுள்ளம் பிள்ளையின் விருப்பப்படி பொட்டிட்டு மகிழ்ந்தது. இவ்விதம் சிறுபிள்ளைபோல் அவர் நடப்பது வழக்கம் என தாயாரும் கூறினார்.

சிரித்தபடியே விடை பெற்றவர், வீட்டுப் படலையில் நின்று ஒரு கணம் திரும்பிப் பார்த்தார்......பின் போய்விட்டார்.

சிறிது நேரத்தின் பின் ...

''தம்பி சாரத்யைும் ரீசேட்டையும் விட்டுட்டுப்போட்டானணை'' என்று. போர்க் அண்ணையின் சகோதரன் அவசரமாகக் குரல் கொடுத்தார்.

''பழசாக்கும், அதான் விட்டுட்டுப்போட்டான் போலக் கிடக்கு'' என்றார் அம்மா.

இன்று, போர்க் அண்ணையின் அம்மா சொல்கின்றார், ''தம்பி அவன் அண்டைக்கு வித்தியாசமா நடந்ததை என்னால புரிஞ்சு கொள்ள முடியேல்லை. ஆனால் கரும்புலியாச் செத்தபிறகுதான், அவன பக்கத்தில படுக்கச்சொன்னது..... பொட்டு வைக்கச்சொன்னது...... உடுப்புகளை விட்டிட்டுப் போனது......ஏனெண்டுவிளங்குது.''

போர்க் அண்ணனின் அம்மாவின் நா தழுதழுத்தது......

# கரும்புலிகளின் வாழ்வில்...

**10-07-1990**

''அண்டைக்கு ஊரெல்லாம் ஒரே பரபரப்பாய் இருந்தது. அண்ணைமார் கடற்கரைக்கு வாறதும் போறதுமாய் இருந்தினம்.

'இண்டைக்குப் பெடியள் கரும்புலியாய் போய் நேவிக் கப்பலை அடிக்கப்போறாங்களாம்' என்று, சனங்கள் பரவலாய்க் கதைக்கினம்.

'அப்பிடியெண்டா நாளைக்குக் காலமை நேவி அடிப்பான்' என்று கொஞ்சச்சனம் ஊரைவிட்டுக் கிளம்பிவிட்டினம். நல்லய் இருண்டதுக்குப் பிறகு ஊர்ச்சனங்கள் கொஞ்சம், கப்பல் அடிக்கிறதைப் பார்ப்பதற்கென்று கடற்கரைக்குப் போனார்கள். நாங்களும் போனம். கடலில இருந்து கூப்பிடு தூரம்தான் எங்கட வீடு.''

முகபாவத்தில் கவலையும் மகிழ்வும் மாறி மாறி வெளிப்பட, அந்த அக்கா சொல்லிக்கொண்டிருந்தா.

''அம்மாவும் அப்பாவும் கரைக்கு வரேல்லை, அவை வீட்டு வாசலிலேயே நிண்டுகொண்டினம். கரையில நாங்கள் போய் பார்த்துக் கொண்டு நிண்டம். படகுகள் வெளிக்கிட்டுப் போச்சுது. நாங்கள் கொஞ்சம்தூரத்தில நிண்டனாங்கள் - இருட்டுவேறு. ஆட்களை அடையாளம் தெரியேலை. படகுகள் வெளிக்கிட்டன. கொஞ்ச நேரத்தில் இருட்டுக்கை மறைஞ்சு போச்சுது. இருட்டைப் போலவே மௌனமும் நிலவியது.

நாங்கள் இருட்டுக்கால கடலைப் பார்த்துக்கொண்டு நிண்டம்.

திடீரென பெரிய வெளிச்சமாய் நெருப்புச் சுவாலை கடலுக்க எரிய, நிலம் நடுங்கிறமாதிரி ஒரு வெடிச் சத்தம் கடலுக்கயிருந்து வந்தது. எங்களை அறியாமலேயே கண்ணால கண்ணீர் வந்திட்டுது. மெதுவானகுரலில் அம்மா.....அய்யோ... என்ற சத்தங்கள் எல்லார் வாயிலிருந்தும் உதிர்ந்தன. 'ஆரார் பொடியள் போச்சுதுகளோ' எண்டு நாங்கள் சொல்லிக் கவலைப்பட்டோம்.''

ஒருகணம் நிறுத்தி - அக்கா தொடர்ந்து சொன்னாள்.

## ஒரு மாலைப் பொழுது

''அடுத்தநாள் நேவி அடிப்பானெண்டுசனம்எல்லாம்வெளிக்கிட்டதாலநாங்களும்கொஞ்சம் தூரத்தில இருக்கிற சொந்தக்காரற்ற வீட்டுக்குப் போட்டு, ரெண்டுநாள்ள நிலைமையைப் பார்த்திட்டுத் திரும்புவம் எண்டு இரவிரவாய்ப் போனம். போற வழியில 'காம்ப்' ஒண்டுக்கு முன்னால, எங்கட தம்பி ஓடித்திரிற மோட்டார் சைக்கிள் நிண்டுது.

அம்மா சொன்னா, 'உங்க தம்பி நிற்பான் போல கிடக்கு...... ஒருக்கா கேட்டுப்பார்' என்று......''

தொடர்ந்து அம்மா கதைக்கத் தொடங்கினாள்......

''நாங்கள் கூப்பிடக் கூப்பிட ஆள்மாறி ஆள்மாறி வந்து எட்டிப் பார்த்திட்டுப் போகினமே தவிர, வெளியால ஒருத்தரும் வரேல்லை.

'வினோத்தின்ர அம்மாவடா......

வினோத்தின்ர அம்மாவடா......' என்று மாறிமாறிச் சொல்லிக் கேக்குது ...இருட்டுக்கை ஒண்டும் தெரியவுமில்லை. ஏன் உவங்கள் ஒளியறாங்கள் எண்டு எனக்குள்ள நினைச்சன். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, ஒருத்தர் பதுங்கிப் பதுங்கி வெளியாலவந்தார்......

''வினோத் நிற்கிறானேடா தம்பி......?''

''இல்......லை......யம்மா......நீங்கள் எங்க நிற்பியள் எண்டு சொல்லுங்கோ... நாங்கள் அவரை வரச் சொல்லீவிடுறம்.....''

''அந்தா அவன்ரை மோட்டச் சைக்கிள் நிக்குது......பொய் சொல்லாதேங்கோடா, எங்க போட்டான்?''

''அது சரியாச் சொல்லேலா தம்மா..... நீங்கள் நிற்கிற இடத்தைச் சொல்லிப்போட்டுப் போங்கோ, காலமை அனுப்பி விடுறம்......''

'என்னடா இவன், கேட்கிறதுக்கெல்லாம் ஒரு மாதிரியா மறுமொழி சொல்லுறான்......? என்ன கேட்டாலும் நாங்கள் நிக்கிற வீடு எது எண்டு கேட்கிறான்?' என்று எனக்குள்ள நினைச்சுக்கொண்டு, நாங்கள் போற வீட்டுப் பாதையைச் சொல்லிப்போட்டுப் போனம்''.

சற்று நிறுத்தி பெருமூச்சொன்றை எறிந்துவிட்டு அம்மா ஆறுதலாகத் தொடர்ந்தாள்.

''அடுத்த நாள்தான் மோனை தெரிஞ்சிது, எங்கட பொடியும் போட்டானெண்டு. 'நிக்கிற வீடு எதெண்டு அந்தப் பொடியன் திரும்பத்திரும்ப கேட்டது ஏன் என்று, அப்பதான் விளங்கிச்சு.''

வினோத்தின் அப்பாசொன்னார்-

''குண்டுச்சத்தம் கடலுக்கை பெரிசாக் கேக்கேக்க, வீட்டு வாசலில நான் குந்தியிருந்தனான்......ஆரார் பெத்த பிள்ளையளோ எண்டு எனக்குள்ள நினைச்சன் ஆனா அடுத்த நாள்தான் தம்பி தெரிஞ்சுது, அதில நான் பெத்த குஞ்சுவும் ஒண்டெண்டு''.

www.eelamview.com

www.eelamview.com



# எது?

**தூ**ரத்து வானிலே ஏதோ சில தெரிந்தன. அவை மனித உருவங்கள் அல்ல, மலர்களும் அல்ல.

''இவை எனக்கு'' என்றது முகில் நீர்.

''இல்லை, எனக்கு'' என விரைந்தது காற்று.

''அவை எனக்கே'' என நிலைத்து நின்றது வெளி! முன்னர் நிகழாத புதுமை இவை!

முன்பு?

இதை எண்ணியபோது நெஞ்சம் இடிந்து, ஓர் அசிங்க அதல பாதாளத்தில் வீழ்ந்தது! அங்கு எதற்கும் சிறகு கிடையாது, காற்றுக்குக் கூட! உடற் கனதி, ஆசையின் நனைவு, அச்சம், நாம் உண்டு உறங்கி வாழ்ந்தால் போதும் என்ற ஊர்வனவின் நோக்கு!

இதுவும் தமிழர்களது முன்னைய நிலையா? இதே மண்ணில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வா? அங்கு–

''இரு'' – என அந்நியர் கூற இவர்கள் இருக்கின்றனர்.

''எழும்பு'' – அவ்விதமே எழும்புகின்றனர்!–

இவ்விதம் முதலில் இருந்து எழும்பியவன் இவர்களின் தலைவராம்!

ஏதோ பட்டிட காட்சி கலைந்தது. காலத்தின் சுழல் ஒலி கேட்டது. அதே தமிழ்மண் தான், ஆனால் காட்சியில் மாற்றம்! வேதனையின் கூடிய வலிப்பு.

தமிழர்கள் இப்போ தூங்கவில்லை, விழித்தபடி ஒடுங்கிக் கிடக்கின்றனர். அந்நியர் ஆள் மாறி மாறி எசமானர் ஆகின்றனர். தமிழினத்தின் சிலர் தம்மை மிதிபடி ஆக்குகின்றனரா...? சீ!

– மீண்டும் ஒரு பொல்லாத கனவின் வேதனை உணர்வு விரைவுக் காட்சிகளாய்த் தலை அசைக்கின்றன.

எம் அடக்கமும் பயமும் எதிரிகளுக்கு உரமாகி, உற்சாகத் துணிவாகிவிட்டதாம்! அவை கும்மாளம் கொட்டுகின்றன! கைது செய்தல், காணாமற் போக்கல்! கொலை! கற்பழிப்பு! எம் நாடும் நிலமும் பறிபோகின்றனவா...?இல்லை! இல்லை!

என்னை அறியாது படுக்கையில் எழுந்தேன். மீண்டும் பாழும் உறக்கம்... கனவுகள்! கனவுகள்! அங்கு -

பொந்துக்குள் ஒளிந்து பிடிபட்ட உடும்பு. ஓடி ஓடி அடிபட்டு விழுந்த முயல்!

நாயொன்று பூனையைப் பிய்க்க ஓடிவரும் காட்சி. ஆனால் பூனை? அது திடீரெனத் திரும்புகிறது.

உடல் தயார் ஆகிறது.

அதன் முன்கால் இப்போ கூரிய ஆயுதம்! அந்த நகக் கீறல் பட்ட நாயின் முகத்தில் இரத்தம் சுரக்கிறது. தனது கண் தப்பியது போதும் என அது மறைகிறது!

''போதுமா?'' இது பூனையின் உறுமல்!

மீண்டும் பலத்த உறுமல். ஆனால் பூனையின் உறுமல் அல்ல, இப்போது புலிகளின் உறுமல்! விடிவை மனதிற் பதித்து எழுந்த இளம் சந்ததி!

– அதற்குரிய தலைமை.

தொடர்ந்த உறுதி, துணிவு, ஆற்றல், எத்தனையெத்தனையோ வகைத் தியாகங்கள்!

பகைவனின் கும்மாள ஒலி குறைவது கேட்டது.

கொடுமை அனைத்தையும் செய்வித்த பெரும் பூதங்கள் சிதறி மடிவது தெரிந்தது.

இந்த விடிவுக்கு உரித்தானோர்...?

இனியும் தூங்கமுடியவில்லை; எழுந்து பார்த்தேன். வானம் தெளிவாகத் தெரிந்தது. அங்கு சில ஒளிகள் துகள்களாய் மேலும் தெளிவாகத் தெரிந்தன.

''இவை எனக்கு'' என்றது காற்று.

''இல்லை, எனக்கு'' என்றது வானம்.

''இல்லை,எனக்கே'' என்றது அழியாத வெளி.

என்ன அது என்ற ஆவலாய் என் உள்ளம் துடித்தது. என்ன அது...?

பதில் இடிபோல எழுந்தது –


''முகம்தெரியாத தற்கொடை...

– தற்கொடை...!''

- நாக. பத்மநாதன்.

# காலப்பதிவான ஒரு கானப்பதிவு

## கரும்புலிகள்



வெளியீடு
விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்

**யூ**லை 5 கரும்புலிகள் நாளை முன்னிட்டு, ஒரு ஒலிப்பதிவு இசைநாடா வெளியிடப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் இதைத் தயாரித்தளித்துள்ளது.

'கரும்புலிகள்' என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த ஒலிப்பதிவு நாடா, கரும்புலிகளது வீரம் – தியாகம் – மற்றும் அவர்களது உள்ளத்து உணர்வுகளைத் தத்ரூபமாக வெளிப்படுத்தும் பாடல்களைக் கொண்டுள்ளது.

இந்த ஒலிப்பதிவு நாடாவுக்கான பாடல்களை புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுதியுள்ளார். தமிழீழத்தின் பிரபல இசை அமைப்பாளர் கண்ணன் அவர்களின் இசையமைப்பால் இந்தப் பாடல்கள் மேலும் சிறப்புறுகின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வீச்சுக்கொள்ளவைக்கும் கலை – இலக்கியப்படைப்புக்களில், ஒலிப்பதிவு நாடாக்களாக வெளிவரும் தாயக விடுதலைப் பாடல்களுக்குக் கணிசமான பங்குண்டு. உணர்வால் எங்கும் எந்த வேளையிலும் எல்லோரையும் ஈர்க்கும் சிறப்பு, இந்த எழுச்சிப்பாடல்களுக்கு உரியது.

மனிதனின் உணர்வுகளைத் தூண்டக்கூடிய பக்குவம் இசைக்குண்டு. இந்த இசைப்பாடல்கள் நாம் வாழும் காலத்து நிகழ்வுகள், நமது சிந்தனைகள், இந்தக் காலத்து வீரமிகு சிறப்புகள் அனைத்தையும் கொண்டிருப்பதால், அனைவரது இதயத்துள்ளும் ஊடுருவி வாழ்கின்றன.

எதிரியின் தோளிலிருந்துகொண்டே 'இந்தமண் எங்களின் சொந்தமண்' என்று பாடினான் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன்.

கிணற்றுக்குள் தவறிவிழுந்து மூச்சிரைத்தபடி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது. 'எதிரிகளின பாசறையைத் தேடிப்போகின்றேன்' என்று பாடியபடியே இறந்துபோனான், இன்னொரு சிறுவன்.

கிளாலிக்கடலில் வாழ்க்கைப்படகோட்டும் படகோட்டிகளும் விறகு சுமந்து திரியும சைக்கிளோட்டிகளும், இந்த வீரமிகு தாயக எழுச்சிப்பாடல்களையே தங்களையும் அறியாமல் இசைக்கின்றனர்.

தேசம் மீதான பற்றுணர்வை, எதிரிக்கெதிரான போர்க்குணத்தை இந்தப் பாடல்களும் ஊட்டிவிட்டுள்ளன. போர் ஏற்படுத்திவரும் தாக்கங்கள் அனைத்தையும் எதிர்கொண்டபடி எழுச்சிகொள்ள வைக்கும் கலைவடிவமாக, இந்தப்பாடல்கள் இன்று எங்கள் தேசத்தில் ஒலிக்கின்றன.

ஒருகாலத்தில் சாதாரண சினிமாப் பாடல்களையே உச்சரித்துக்கொண்டிருந்த உதடுகள், இன்று எங்கள் தாயகத்து விடுதலைப் பாடல்களை உரத்துப் பாடும் அளவுக்கு எமது எழுச்சிப்பாடல்கள் ஓங்கி உள்ளன.

ஒலிப்பதிவு நாடா இலக்கியம் என்று கூறக்கூடிய அளவுக்கு, எமது விடுதலைப் போராட்டத்தில் இந்த இசைநாடாக்களின் பங்கு அளப்பரியதாக உள்ளது.

இசை, பாடலின்பொருள், ஒலிப்பதிவு நுணுக்கம், பாடகர்களின் திறமை, இசைக்கலைஞர்களின் கூட்டு உழைப்பு ஆகியன ஒருங்கிணையும்பொழுது, பாடல்கள் சிறப்படைகின்றன – இலகுவாக மக்களின் மனங்களில் இடம் பெறுகின்றன.



கரும்புலி கப்டன் ஜெயந்தன்
(சம்புக்குட்டி பத்மநாதன்)
சோதிபுரம், மட்டக்களப்பு.
வீரச்சாவு: 04-05-1991

கரும்புலி
லெப். கேணல் போர்க்
(மாப்பாணப்பிள்ளை அரசரத்தினம்)
ஆறுமுகத்தான் புதுக்குளம், வவுனியா.
பிறப்பு: 11-11 1959 வீரச்சாவு: 23-11-1990

கரும்புலி கப்டன் வினோத்
(வேலுப்பிள்ளை திலகராஜா)
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.
பிறப்பு: 19-08-1970 வீரச்சாவு: 10-07-1990


'கரும்புலிகள்' ஒலிப்பதிவு நாடாவில் மேற்குறித்த அனைத்து விடயங்களும் ஒருங்கிணைந்திருப்பதால், அந்த ஒலிப்பதிவு நாடா சிறப்பானதொன்றாகி விட்டது. இந்த இசைநாடா மக்கள் அனைவரது இதயங்களிலும் இடம்பெற்று ஒலிக்கப்போகின்றது என்பது உறுதி.

www.eelamview.com

www.eelamview.com



# தளராத உறுதி



வெடிமருந்து நிரப்பிய படகுடன் கரும்புலிகள் கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம்.

*04-05-91 அன்று நடந்த கரும்புலித் தாக்குதலைப்பற்றி கதைத்த பொழுது கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை சொன்னார்.*

இறுதி நேரத்தில், கடலில், சிதம்பரமும் - ஜெயந்தனும் காட்டிய உறுதியை என்னால் மறக்கமுடியாது. இப்போதும் அது என் நினைவில் பசுமையாகவே இருக்கின்றது. அது ஒரு முன்னிரவு நேரம்.

எமது கரும்புலித் தாக்குதலின் இலக்காகிய 'அபிதா' என்றபெயருடைய கட்டளைக் கப்பல் கரையிலிருந்து சுமார் எட்டுமைல் தொலைவில் நின்றது.

இக்கப்பலைத்தேடி திசையறிகருவியின் உதவியுடன் கரும்புலிகளின் வெடிமருந்து ஏற்றிய படகு புறப்பட்டது சிறிது நேரத்தில் வோக்கிமூலம் தொடர்பு கொண்டு கதைத்தார்கள்.

''நாங்கள் கதைக்கிறது விளங்குகிறதா?'' எனக் கேட்டோம்.

''நீங்கள் ..... கதைப்பது -... தெளிவாகக்......கேட்கிறது'' என எந்தவித சலசலப்புமில்லாமல் உறுதியுடன் அறிவித்தார்கள்.

மேலும் சில நிமிடங்கள் சென்றன. சிதம்பரமும் - ஜெயந்தனும் சென்ற வெடிமருந்துப் படகு சுமார் 4 மைல் கடந்திருக்கும்.

அப்போது-

'எங்களுடைய இலக்கைக் கண்டுவிட்டோம்'

'எங்களுடைய இலக்கைக் கண்டுவிட்டோம்......' என உற்சாகம் பொங்க படகிலிருந்து அறிவித்தனர்.

குரலில் பதட்டமோ அல்லது தயக்கமோ தென்படவேயில்லை - கரையில்நின்ற தோழர்களின் நெஞ்சுதான் பதைபதைத்துக்கொண்டிருநதது.

மேலும் சில நிமிடங்கள் சென்றிருக்கும்.

'திட்டமிட்டபடி நாங்கள் செய்யப்போகிறோம்'

'ஏற்கனவே திட்டமிட்டபடி நாங்கள் செய்யப்போகிறோம், என்ற குரல் கடல் இரைச்சலையும் கிழித்துக்கொண்டு எங்களுக்குத் தெளிவாகக் கேட்டது.

கரையில் நின்ற போராளிகள் அனைவரும் கண்வெட்டாது கடலையேபார்த்துக்கொண்டு, வோக்கிக்கு காதைக் கொடுத்துக்கொண்டு நின்றார்கள்.

அப்போது சிதம்பரமும், ஜெயந்தனும் சேர்ந்து வோக்கி ஊடாக

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'' என உரத்துக் கத்தினர்.

அதைத்தொடர்ந்து கடலுக்குள் பெரு வெளிச்சம், சில வினாடிகளில் பெரும் வெடி ஓசையும் கரையை உலுக்கியது.

அடுத்த நாள் பகல் ஒருபக்கம் சாய்ந்தபடி, சேதமடைந்த நிலையில், இருந்த 'அபிதா' கப்பலை கட்டியிழுத்துச் செல்ல கடற்படையினர் முயன்று கொண்டிருந்தனர். சில 'டோரா' விசைப்படகுகள் கடலில் எதையோ தேடி ஓடிக்கொண்டிருந்தன.

பல வருடங்களாக எமது போராளிகள் பலரின் உயிர்களை விழுங்கக் காரணமாக இருந்த ஒரு கடலரக்கனைக் கொன்று சிதமபரமும் ஜெயந்தனும வீரசாதனை புரிந்துவிட்டார்கள்.

# கரும்புலிகளின் வாழ்வில்...

## நாட்டுக்காக...

இவன் பிறந்து வளர்ந்தது மன்னார் மாவட்டத்தின் நறுவிலிக்குளம் என்னும் கிராமத்தில். இவனது பெற்றோர் இன்று ஏதிலிகளாய் இருப்பது, இதற்கு அப்பாலுள்ள பண்டிவிரிச்சான் கிராமத்தில். ஆனால் இவன் எங்கே?

இவர்களுக்கே தெரியும், இவன் கரும்புலியாகி வீரம் விளைந்த வடகடலின் நீரிலும், காற்றிலும் இன்று கலந்து வாழ்கிறான் என்பது. எனவேதான் இவனது தாய் தன் துயரைத் துடைக்க பேரக்குழந்தைக்கு (மூத்த மகளின் மகனுக்கு) 'கொலின்ஸ்' என்று பெயரிட்டு அழைக்கிறாள். அந்த அழியாத பெயர் இவர்களுக்கு ஓர் ஆறுதலையும், துணிவின் உறுதிப்பாட்டையும் தந்து நிற்பதை அந்த வீட்டாருடன் உரையாடக் கிடைத்தபோது உணரமுடிந்தது.

அந்தச் சூழலில் அவனது வயோதிபத் தந்தை கூறினார்.

''இவன் தம்பி, வலு கெட்டிக்காரன். நல்லாப் படிப்பான். அவன் படிச்சுக்கொண்டிருக்கேக்க எங்க ஊரிலையும் சிங்கள ஆமிக்காரங்க சுத்தி வளைச்சு கனபேரை பிடிச்சுக் கொண்டு போனாங்கள். அதனால் நாங்கள் பல இடங்களுக்கு இடம் பெயர்ந்தம், இது இவனுக்கு சரியான கவலை. அவன் தம்பி, 'ஆமியின்ரை கையில பிடிபட்டுச் சாவதைவிட ஒரு ஆமிக்காரனைத் தானும் சுட்டுட்டுச் சாகலாம' என்று சொல்லுவான்.''

''இவன் வெளிநாடு செல்ல விரும்ப இல்லை. சொன்னபடி இயக்கத்திலதான் சேர்ந்தான்''-இது அங்கிருந்த தாயாரின் வார்த்தை. இதைத் தொடர்ந்து மீண்டும் அந்தத் தந்தையார் கூறத்தொடங்கினார்.

''தம்பி இவன் லீவு முடிஞ்சு போறதுக்கு முதல் நான் தாயைப் பார்த்து 'அம்மா, நான் இயக்க வேலையா ஒரு இடத்துக்குப் போக இருக்கிறன். இது முக்கியமான வேலை. இந்த வேலையின் உழைப்பு விட்டுக்கு வராது- அது நாட்டுக்கு மட்டும்தான்' என்று சொன்னான் - நாங்கள் அதை அப்ப பெரிசா எடுக்கேல்லை.''

ஆனால் கொலின்ஸ் அம்முறை ஊருக்கு வந்தபோது அவனுக்கு தனது மரணம் ..... அதன் திகதி கூடத் தெரிந்திருந்தது. வந்தவன் தான் படித்த பாடசாலை பழகிய இடங்கள் எங்கும் சென்றான். கூடித்திரிந்த நண்பர்களுடன் பாசத்தோடு கதைத்தான்.



கரும்புலி கப்டன்
**கொலின்ஸ்**
(பர்ணாந்து சில்வெஸ்டர்)
(நறுவிலிக்குளம், மன்னார்.)
பிறப்பு: 05-12-1969
வீரச்சாவு: 10-07-1990

இவனோடு படித்து கூடித்திரிந்த நண்பன் இவனைப்பற்றிச் சொல்லும் போது - ''அண்ணை. நாங்கள் ஒரு நாள் பொழுது படுகிற நேரம் சந்தி மதவடியில கதைச்சுக்கொண்டு நிண்டனாங்கள். அப்ப கொலின்ஸ் எங்களைக் கண்டிட்டு வந்து 'மதவடியில இருந்து எங்களோட கதைச்சுக்கொண்டிருந்தான். 'சாக ஒருக்காலும் பயப்படக் கூடாது 'என்ற கொலின்சின் வார்த்தைஇப்பத்தான் எனக்கு விளங்குது'' என்றான்.

இந்த 21 வயது இளைஞன்- கரும்புலி கொலின்ஸ்- தன் சாவினால் இனத்திற்குச் சாதித்தது என்ன என்பதை சரியாக உணர வேண்டின் அவன் தன்னைத்தானே தற்கொடையாக்கிய 10.07. 1990 க்கு சற்று முன்னைய நாட்களை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அங்கு- வடமராட்சியைச் சார்ந்த பகுதியில் தன்கூரிய பார்வையைச் செலுத்தியபடி எதிரியின் பாரிய கப்பல் ஒன்று நிலைகொண்டு நிற்கிறது. அதன் ஆதிக்கக் கண்ணோட்டம் எங்கும் செல்லும். அது கடற்படைப் படகுகளுக்கு வேவு பார்க்கும். தகவல் கொடுக்கும். 'எமது படகுகள், படகோட்டிகள், ஊர்மனைகளை அழிக்கவும் அடக்கவும் அது உதவிகள் செய்யும். இதை அகற்ற வேண்டியிருந்தது. இந்த உறுதிப்பாட்டுடன் மீண்டும் வடபகுதிக் கடற்கரைக்கு வருவோம்.

அங்கு -

''பொடியள் கரும்புலியா கப்பலை அடிக்கப்போறாங்களாம்'' என கதை பரவுகிறது.

கரையில் வரிப்புலிச் சீருடைகளுக்கு நடுவில் கரியநிற சீருடைதரித்த மூவர். அச்சீருடையுடன் நின்றவர்களில் கொலின்ஸ் ஒருவன். கடலலை இந்த மூன்று கரும்புலிகளின் பாதங்களைத் தொட்டுச் செல்கின்றன.


அக்கரிய இருளில் கையசைத்து கூடியிருந்தவர்களிடமிருந்து விடை பெறுவது தெரிகிறது.

படகு புறப்பட்டு ...... பின் மறைகிறது.

கண்கள் கடலை ஊடுருவுகின்றன.

சிறிது நேரத்தில் கடலில் பெரிய ஒளிப் பிளம்பு. அதோடு அதிரும்வெடி ஒலி.

அந்த உப்புக் காற்று அவர்களை அணைத்துக்கொண்டது.



இந்த உழைப்பு வீட்டுக்கு வராது.
அது நாட்டுக்கு மட்டும்தான்.

www.eelamview.com

www.eelamview.com



## ◁◁◁◁ கரும்புலிகளின் வாழ்வில்... ▷▷▷▷▷

# 'நான் போறன் அண்ணை'

சிதம்பரம்.

நிறையப்படிக்கவேண்டும் என்று அவன் சின்னவனாக இருக்கும் போது ஆசைப்படுவான். ஆனால், குடும்பத்தின் கஷ்டநிலை அவனது கனவுகளைச் சிதைத்தது. நான்காம் வகுப்புக்குப் பிறகு அவன் புத்தகங்களைத் தூக்கியதில்லை.

அவர்கள் குடியிருந்த வீட்டில்தான் ஏழ்மையும் குடியிருந்தது.

வீட்டில் அம்மாவும் அக்காமாரும் செய்கின்ற எள்ளுப்பாகுவையும், பலகாரங்களையும் தோளில் வைத்துக்கொண்டு அவன் தெருவில் இறங்குவான். திரும்பி வந்த பிறகுதான் அவர்களின் வீட்டில் அடுப்பெரியும்.

வளர்ந்தபின் 'றோளரில்' கடலில் மீன்பிடிக்கச் செல்வான் - மீன் கிடைக்காதுபோனால், வாட்டத்தோடு திரும்பிவருவான்.

ஆரம்ப நாட்களில்:

பலாலியில் சிங்கள முப்படைகளின் கூட்டுத் தளத்திற்கு எதிரில், ஒரு பிறண் எல். எம். ஜி உடன் காவலிருந்த சிதம்பரத்தின் பணி,

பிற்காலத்தில் ஒரு கடற்புலி வீரனாக தமிழீழ அலைகளின் மீது தொடர்ந்தது.

இப்போது-

சிங்களப்படையின் பீரங்கிக் குண்டினால் அரைவாசி இடிந்து நொருங்கிய- அவர்களுக்குச் சொந்தமில்லாத - வீடொன்றின் ஒருபக்க மூலையில்-

கொடிய நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டு இருகால்களும் இயலாத நிலையில், கட்டிலில் இருந்துகொண்டு - சிதம்பரத்தின் ஏழைத்தாய் தன் வீரமைந்தனை நினைவுகூருகின்றாள்......



**கரும்புலி கப்டன் சிதம்பரம்**
(பெரியதம்பி, சந்திரன்)
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 20-12-1972 | 04-05-1991 |

முற்றத்தில் நிற்கும் வேப்ப மரத்தில் ஏறி பூ கொய்துகொண்டு வந்து கொடுத்து-

''இதிலை ஏதாவது செய்யணை...... சாப்பிடுவம்'' என்று சொல்வான்.

சிதம்பரம் ஏற்கெனவே கலகலப்பானவன். துன்பம் வாட்டுகிறபொழுது, அவனது முகத்தில் அதைக் கண்டு கொள்ளமுடியாது. எல்லோரையும் சிரிக்க வைத்து தானும் சிரிப்பான்.

சந்திரனாக இருந்தவன் தான் - 1989இன் இறுதிக் காலத்தில் சிதம்பரமானான்.

''அவனொரு இருட்டுக்குப் பயந்த பெடியன் மோனை...... சின்னவயதில அவன் மீன்பிடிக்கப் போகேக்க, நான்தான அவனை படகுவரை கூட்டிக்கொண்டு போய்விடவேணும் ... அப்பதான் போவான்... அவனுக்கு அவ்வளவு பயம்......

......அந்தமாதிரி பயந்துகொண்டு இருந்தவன் தான் தம்பி இயக்கத்துக்குப் போய் போராடி, அதே கடலில்...... இப்ப இவ்வளவு வீரனாய்...''

அந்தத் தாய் கண்ணீரோடு பெருமைப்படுகிறாள்.

தளபதி சூசை அவர்கள், தனது கண்களுக்குள் நிழலாடும் அந்த இறுதி நாட்களைப்பற்றிச் சொல்கிறார்.

''நடுக்கடலில் நின்றுகொண்டு எங்களுக்கு சவாலாக இருந்த, சிங்களக் கடற்படையின் 'அபித்தா' என்ற கட்டளைக் கப்பலின் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டோம்.

அதற்காக இரண்டு கரும்புலிகள் தயார் செய்யப்பட்டனர். அதில் ஒன்று ஜெயந்தன். மற்றது இன்னொரு போராளி.

கடைசி நேரத்தில், அந்தப் போராளியை தவிர்க்கமுடியாத ஒரு காரணத்தினால் அனுப்ப முடியாமல் போய்விட்டது.

என்ன செய்யலாமென நாங்கள் யோசித்துக் கொண்டிருந்த போது, அருகில் நின்று நிலைமையைப் புரிந்துகொண்ட சிதம்பரம் தானேமுன்வந்து, 'நான் போறன் அண்ணை' என்று சொன்னான்.

சிதம்பரம் ஏற்கெனவே தன்னை கரும்புலிகள் அணியில் இணைத்திருந்தான்.

ஆனாலும் திடீரென ஒரு தேவை ஏற்பட்ட போது தானே விரும்பி முன்வந்து கரும்புலித் தாக்குதலில் இறங்கியதை, என்னால் மறக்கமுடியாது.

# கடைசி முத்தம்

வடமராட்சியை சிங்களப்படைகள் ஆக்கிரமித்தநேரம் அது.

அவர்கள் உருவாக்கிய அச்சம் தருகின்ற அமைதி, அங்கு இரவு நேரங்களில் ஆட்சிசெய்யும்.

அப்படியான ஒரு இரவு. சில நண்பர்களுடன் மில்லர் வீட்டுக்கு வந்தான்.

அம்மா பால்காய்ச்சிக் கொடுத்தாள்.

எல்லோரும் குடித்தார்கள்.

''அம்மா......நான் இல்லாத நேரங்களிலையும் பொடியள் வருவாங்கள் .... அவங்களுக்கு சாப்பாடு குடுங்கோ......'', மில்லர் சொன்னான்.

அம்மா அதை எப்போதும் போல சாதாரணமாகவே எடுத்துக்கொண்டாள்.

கேட்கக்கூடாததுதான் என்பது தெரிந்திருந்தும், மனதுக்குள் இருந்த ஆதங்கத்தை பெரியம்மா அவனிடம் கேட்டுவிட்டார்.

''உன்னோட இருந்த பொடியள் சிலதுகள்இயக்கத்தை விட்டிட்டுப்போட்டுதுகள் தானேடா ... அதைப்போல நீயும் வந்து...... எங்காவது போய் உழைச்சு அம்மா அப்பாவை பாக்கலாம்தானே மோனை?''

தலையை ஒருபுறமாசத் திருப்பியபடி பெரியம்மாவைப் பார்த்துச் சொன்னான், '' என்னோட இருந்த பொடியள் கனபேர் செத்துப் போனாங்கள் பெரியம்மா. நீங்கள் விட்டுட்டுப் போனவங்களை உதாரணமாகக் கதைக்கிறியள். என்ர மனதில செத்தவங்கள் ஞாபகம்தான் நிரம்பி வழியுது - அவங்களை என்னால மறக்கேலாது...... எல்லாரும் விட்டுட்டுப் போனா நாட்டுக்காகப் போராடுவது ஆர்...... நாட்டுக்காகச் செய்ய வேண்டிய எங்கட கடமைகளை நாங்கள் செய்யவேணும்தானே பெரியம்மா ... ''அவனது விழிகள் அகல விரிந்து அர்த்தத்தோடு அவர்களைப் பார்த்தன.

அந்த வார்த்தைகளின் பின்னாலுள்ள உறுதியின் கனபரிமாணத்தை அப்போது அவர்கள் அறியவில்லை.

போவதற்காக எழுந்தவன், அம்மாவைப் பார்த்தான்...... திரும்பவும் பார்த்தான்...... என்றுமில்லாதவாறு அம்மாவைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சினான். அம்மாவுக்கு எதுவும் விளங்கவில்லை; விளங்கவும்கூடாதுதானே!

ஆனால், அதுதான் தனது பாசமகன் தனக்குத் தந்திட்டுப்போன கடைசி முத்தம் என்பது, ஐந்து நாட்களுக்குப்பின் அம்மாவுக்குத் தெரிந்த போது .....

இப்போது அம்மா அதைத்தான் ஞாபகம் கூர்ந்து கண்ணீர் வடிக்கின்றார்.

# எதுவரினும் தலைவரைக் காப்போம்

**1982** ஆம் ஆண்டு.

இற்றைக்கு பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு தலைமறைவு கெரில்லாக்களாக எமது மூத்த போராளிகள் வாழ்ந்த காலம். புலி வீரர்கள் தங்களை யார் என அடையாளம் காட்டாத காலம். அந்தக் காலத்தில் ஒரு நாள்...

சென்னையில், தலைவர் பிரபாகரன், தமிழ்நாட்டுப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

தலைவரின் புகைப்படத்தையே கண்டிராத சிங்களப் படைகளுக்கு அவர், சென்னையில், பொலிஸ் காவலில் உள்ளார் என்ற செய்தி தேனாக இனித்தது.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த படாத பாடுபட்டனர்.

தலைவரை தம்மிடம் ஒப்படைக்கும்படி சிங்கள அரசு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்தது.

இந்திய அரசு கோரிக்கையை ஏற்று விடுமோ? என்ற அச்சம் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டது.

தமிழ் நாட்டிலுள்ள சில கல்லூரிகளின் மாணவர்கள் தலைவர் பிரபாகரனை நாடுகடத்தக் கூடாது என ஆர்ப்பாட்டம் செய்தனர். தமிழ்நாட்டின் சில அரசியல்வாதிகளும் அந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

ஆயினும் எமது தோழர்களுக்கு உள்ளூரப் பயம்.

தற்செயலாக சிறீலங்கா அரசின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால். ..?

எப்படித் தடுக்கமுனையலாம்? எனக் கலந்துரையாடினர். மண்டையைப் பிய்த்தனர்.

இறுதியில் லெப். கேணல் பொன்னம்மானும், கப். ரஞ்சனும் இணைந்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

தங்களது உயிர்களைத் துறந்து தலைவரைப் பாதுகாக்க முடிவெடுத்தனர்.

சிறிலங்கா அரசிடம் தலைவரை ஒப்படைக்க இந்திய அரசு முடிவெடுத்தால்—

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கோபுரத்தில் ஏறி உச்சியில் நின்றபடி தலைவரை இலங்கை அரசிடம் ஒப்படைக்கக் கூடாது என, இந்திய அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுப்பது-

பேச்சுக்கு செவிசாய்க்காவிட்டால் உச்சியிலிருந்து முதலில், ஒருவர் கீழே குதித்து தற்கொலை செய்வது-

அதற்கும் இணங்கி வராவிட்டால் அடுத்தவரும் குதித்துத் தற்கொலை செய்வது-

இந்தத் தியாக முயற்சி தமிழ்நாட்டை கிளர்ந்தெழச் செய்து தலைவரைப் பாதுகாக்கும் என நம்பினர்.

ஆனால் தமிழினத்தின் பேரதிஷ்டம் அவ்விதமான எந்த சம்பவமும் நடைபெறவில்லை. தலைவர் பாதுகாக்கப்பட்டார்.

ஈழத்தமிழினத்தின் இணையற்ற பெருந்தலைவனை தம்முயிரைக் கொடுத்துக் காக்கமுயன்ற அந்த மூத்ததோழர்கள் இருவரும் இன்று இல்லை. வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவடைந்துவிட்டனர்.

www.eelamview.com

www.eelamview.com



## அழகு மாணிக்கங்களாய் அல்ல; அத்திவாரக் கற்களாய்

## உறங்கும் உண்மை

ஓரிரண்டு பேருக்குள்ளே
உறங்கும் உண்மைகள் - இது
ஊருலகம் அறிந்திடாத
உறவின் தன்மைகள்
பேரிரைச்சலோடு ஒரு
வெடி வெடித்திடும் - இங்கு
போகவிடை கொடுத்த நெஞ்சம்
துடிதுடித்திடும்.

உங்களுக்கு மட்டும் எங்கள்
உணர்வுகள் புரியும்
ஊமைகளாய் நாமிருக்கும்
காரணம் தெரியும்
பொங்கும் மகிழ்வோடு நீங்கள்
போய்விடுவீர்கள்
போனபின்னர் நாமழுவோம்
யாரறிவீர்கள்?

தாயகத்து மண்ணைத் தானே
காதலித்தீர்கள்.
சாவையெதிர் பார்த்துப் பார்த்துக்
காத்திருந்தீர்கள்
பாயும் கரும் புலிகளாகிப்
பகைமுடித்தீர்கள்
பாதகரின் நெஞ்சினிலே
போய் வெடித்தீர்கள்.

கல்லுக்குள்ளே ஈரமுண்டு
கசிவதும் உண்டு
கரும்புலிகள் விழிகளில் நீர்
வழிவதும் உண்டு
அல்லும்பகல்
அண்ணன் பெயரை
உச்சரித்தீர்கள்
அந்தப்பெயர் சொல்லி மேனி
பிச்செறிந்தீர்கள்.

— புதுவை இரத்தினதுரை



**ஆதிக்கப் புயலின் ஆவேச நடனம்**
**விரிந்த சிறகின் விரைந்த அசைவு**
**தென்றலின் தழுவலில் அதிரும் அகிலம்**
**தமிழீழம் சிரிக்க காவியம் பிறக்கும்!**

**உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றிகொள்ளப் பட முடியாததும் - உலகில் எந்தத் தொழில்நுட்பத்தாலும் தடுக்க முடியாததும்- உலகில் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்க முடியாததும்தான் எங்களது கரும்புலிகளின் மனோபலம். அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு தேசியத்தின் இயக்கு சக்திக்கு உந்து விசையாக விளங்கும் ஒரு உயரிய அரசியல் போர் வடிவம்தான் கரும்புலிகள்.**

## தடைக்கல்லைத் தகர்த்தெறிய...

கண்ணுக்கெட்டாத தூரத்தில்
காற்றோடு காற்றாகக்
கலந்துவிட்ட
எங்கள்
அன்புத் தோழியே,

மரணத்துள்
உன்னை நுழைத்து
மகத்துவம் புரிந்துவிட்டு
மௌனித்து விட்டாய்.

அந்நிய தேசத்து
ஆக்கிரமிப்பாளருக்கு
எங்கள் தேசச் சட்டத்தில்
இப்படித்தான்
விதிக்கப்பட்டுள்ளது என்று
தீரச் செயலால்
தண்டனைகொடுத்த திருப்தியுடன்
விழிகளை மூடி
வீரகாவியம் படைத்துவிட்டாய்.

ஈகம் செய்து
எங்கள் இமைகளை
நனைய வைத்தாய்.
சோகப் புயலுக்குள்
சுழன்று
தவிக்கவும் செய்தாய்.

ஆனாலும்,
ஆண்மைக்கு மட்டுமல்ல,
பெண்மைக்கும்
வீரமே பொருள் என
விடை கூற,
பெண்மையின் சாதனையை
பெருமையுடன் பேச,
எங்கள் பாதையின்
பெரும் தடைக்கல் ஒன்றைத்
தகர்த்து எறிய,
இப்படி ....
எத்தனையோ நல்லவை நடக்க
எரியும் மலையானாய்.

எதிரிக்கு
எமனும் ஆனாய்.

புதிருக்குள் புதிராகிப்
புரட்சிப் புயலான
எங்கள்பிரிய நண்பியே,

உன் இழப்பால் என் இதயம்
தவித்துத் துடிக்கிறது.
ஆனாலும்
உன்
மகத்துவ மரணத்தால்
நிகழ்ந்ததை எண்ணி
எங்கள் நெஞ்சம்
பெருமை கொள்கிறது.

— காயத்திரி

www.eelamview.com

www.eelamview.com



# மதகுருமாரின் சமாதான முயற்சிகளும் அரசாங்கத்தின் அக்கறையின்மையும்

**போ**ரை நிறுத்தி சமாதான சூழலை உருவாக்கும் முயற்சியில் அண்மைக்காலமாக, மதத்தலைவர்களைக் கொண்ட நல்லெண்ணக் குழுக்கள் பெரும் ஆர்வம்காட்டி வருகின்றன.

22-4-92 இல் புத்தபிக்குகளின்குழு ஒன்று யாழ்ப்பாணம்வந்ததிலிருந்து 8-6-93 அன்று, ஆசிய ஆயர்கள் மாநாட்டின் ஏற்பாட்டின் பேரில் வந்த மதத்தலைவர்கள்வரை, அது தொடர்ந்துள்ளது.

இடையில் கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ, யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆயர் தோமஸ்சௌந்தரநாயகம் அவர்களுடனும் தென் இந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆயர் டி. ஜே. அம்பலவாணர் அவர்களுடனும் இணைந்து, சமாதான சூழல ஒன்றை உருவாக்க முயன்றார்.

இந்த முயற்சியில் ஈடுபட்ட எந்த ஒரு பிரிவினாலும், சமாதானத்திற்கான தங்களது நல்லெண்ண முயற்சியை இரண்டாங் கட்டத்திற்கு நகர்த்த முடியவில்லை.

இதற்குக் காரணம் சிங்கள அரசின் ஒத்துழைப்பின்மைதான்.

இம்முயற்சிகளில் ஈடுபட்ட பல மதத்தலைவர்கள், குறிப்பாக கிறிஸ்தவ மதத் தலைவர்கள், இந்த உண்மை நிலையை நேரடியாகவும் மறைமுகமாகவும் உலக சமூகத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

சிங்கள தேசத்திலும்சரி வெளிநாடுகளிலும்சரி, சமாதானத்திற்குக் குறுக்கே புலிகள் இயக்கமதான் தடைக்கல்லாக இருக்கின்றது என்ற தவறான ஒரு எண்ணப்பாடே பிரச்சாரப்படுத்தப்படுகின்றது. சிங்கள அரசும், அதன் தொடர்பு சாதனங்களும் இத்தகைய தொரு பொய்யையே, நடைமுறை உண்மைபோல திரித்துக் கூறி வருகின்றன. புலிகள் இயக்கத்திற்கும் உலக செய்திச் சேவையினர்க்கும் இடையில் நேரடித் தொடர்பு இல்லாதிருப்பதால், இந்த செய்தி மோசடியை -கருத்துத் திரிப்பை - உலகமும் உண்மையென நம்புகின்றது.

''பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக அரசு சமாதானக்கதவுகளைத் திறந்தே வைத்திருக்கின்றது. புலிகள்தான் போரைத் தொடர்கின்றார்கள்'' என்ற சிங்கள அரசின் பொய்யான கருத்தை நம்பியே இந்த நல்லெண்ணக்குழுக்கள், புலிகள இயக்கத்தை சமாதான வழிக்கு வரத்தூண்டும் எண்ணத்துடன் யாழ்ப்பாணம் வருகின்றன. வந்து புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடாத்திய பின்தான், சமாதான முயற்சிகளில் புலிகள் காட்டும் ஆர்வத்தையும். சமாதான சூழலை ஏற்படுத்த முன்னோடியாக என்னென்ன சமிக்ஞைகளை அரசுக்குக் காட்டவேண்டுமோ அவற்றையெல்லாம் வெளிக்காட்ட புலிகள் இயக்கம் தயாராகவே இருப்பதையும், நேரடியாகக் கண்டுகொள்கின்றனர்.

அதேவேளை, புலிகளின் இந்த சாதக நிலையை பற்றிப்பிடித்து, பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக போர்நிறுத்தம் ஒன்றை அறிவித்து சமாதான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்ற புலிகளின் நியாயமான கோரிக்கையை சிங்கள அரசு ஏற்கமறுக்கும் போதுதான், யார் சமதானத்தை விரும்புகின்றார்கள், யார் அதற்குத் தடைக்கல்லாக நிற்கின்றார்கள் என்ற உண்மையை, நல்லெண்ணக்குழுவினரும் புரிந்துகொள்கின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த, பிலிப்பைன்ஸ் மற்றும் மலேசியாபோல் றநாடுகள்உள்ளிட்ட சர்வதேச நல்லெண்ணக் குழுவினர், தங்களுடன் ஒரு சமாதான திட்டத்திற்குரிய சிபார்சுகளையும் கொண்டுவந்திருந்தனர்.

தமிழ்மக்களைசமாதானவழிக்குத் தூண்டுவதையும், சமாதான வலயங்களை அமைப்பதையும் அத்திட்டம் சிபார்சு செய்கின்றது.

இதற்கு புலிகளின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில், ஒருசில சமாதான வலயங்களை அல்ல வட-கிழக்கு முழுவதையும் ஒரு சமாதான வலயமாக மாற்றவே விரும்புவதாகத்தெரிவித்தனர். அத்துடன் தமிழ் மக்கள் சமாதானத்திற்கு தயாராக அதை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டே இருக்கின்றார்கள். இத்தகையவர்களிடம் சமாதானம் தேவை எனப் பிரச்சாரம் செய்வது அவசியமற்றது. இத்தகைய பிரச்சாரம் சிங்கள மக்கள் மத்தியில்தான் தேவையானது. அப்போதுதான் அம்முயற்சி நன்மை அளிக்கும் என்றும் புலிகளின் பரதிநிதிகள் எடுத்துக் கூறினர். அத்துடன், நடந்துகொண்டிருக்கும் இந்தப்போரின் வேர்கள் எங்கே உள்ளன? இப்போரின் அடிப்படைக் காரணிகள் என்ன? இந்த அடிப்படைக்காரணிகளைத் தீர்க்காது நடைபெறும் எநத முயற்சியும் உண்மையான சமாதானத்தைக் கொண்டுவராது; மாறாக அது தமிழ் இன அழிப்பையே ஊக்குவிக்கும் என்பதையெல்லாம் வரலாற்றை உதாரணம் காட்டி, புலிகளின் பிரதிநிதிகள் எடுத்துவிளக்கினார்கள்.

இந்த சமாதான நல்லெண்ணக் குழுவினர் சில மக்கள் அமைப்புக்களையும் சென்று சந்தித்து, சமாதான சூழலை உருவாக்குவதில் மக்களுக்கிருக்கும் பங்கையும் எடுத்து விளக்கினர். அதைச் செவிமடுத்த மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள், எமக்கென்றொரு தலைமை உண்டு; அதுதான் புலிகள் இயக்கம். இந்த விடயங்களை அவர்களுடன் கதைப்பதுதான் நடைமுறைச்சாத்தியமானது என்றும் தங்களது கருத்தைத்தெரியப்படுத்தியிருந்தார்கள்.

இவ்விதமாக தமிழ் மக்கள் தரப்பில் தமது சந்திப்புக்களை இனிதே முடித்துகொண்டு சிங்கள தேசம் சென்ற இந்த நல்லெண்ணக் குழுவுக்கு, தக்க வரவேற்புக் கிடைக்கவில்லை.சிங்கள அரசும் இக்குழுவை அசட்டை செய்தது. சிங்களதேசத்து அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் பௌத்த மதபீடமும் இக்குழுவினரை அசட்டை செய்தது. இக்குழுவினரின் கருத்துக்களை அரசு ஏற்க வேண்டும் என்றில்லை எனக் கூறி. அவர்கள் மேற்கொண்ட சமாதான முயற்சியை சிங்கள அரசின் பேச்சாளர்ஊக்கம்கெடவைத்தார். சிங்கள தேசத்தின் தரப்பிலிருந்து கிடைத்த இந்த அக்கறை இன்மையால், சமாதான முயற்சியை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்த முடியாது, நல்லெண்ணக் குழு திரும்பிச் சென்றது. ஆனாலும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு புலிகள் விடுத்த வேண்டுகோள் நியாயமானது; அதை அரசு ஏற்றுக்கொண்டால்தான் சமாதான சூழல் பிறக்கும் என்ற கருத்தை. இக்குழுவில் இடம்பெற்ற ஓர் ஆயர் உலக சமூகத்திற்கு தெரியப்படுத்தினார்.

தமிழர் தாயகத்தில் சமாதான சூழலை உருவாக்க, இலங்கைத் தீவின் உள்ளேயும் வெளியேயும் இருந்து கிறிஸ்தவ திருச்சபை மேற்கொள்ளும் நல்லெண்ண முயற்சிகளை, சிங்கள பௌத்த பேரினவாதம் எரிச்சலுடன் நோக்குகின்றது. அத்துடன். இத்தகைய நல்லெண்ணக்குழுக்கள் தங்களுடன் சிங்கள பௌத்த குருமாரையும் இணைத்துக்கொள்ளும் முயற்சியும் சரியான பயனைக் கொடுக்கவில்லை.

இதற்கு ஒரு காரணமுண்டு. தமிழர்களின் தாயகத்தை அபகரிப்பது, தமிழினத்தைச் சிதைப்பது, ஒட்டுமொத்தத்தில் இத்தீவை சிங்கள - பௌத்த நாடாக மாற்றுவதுதான் சிங்கள பௌத்த மதபீடத்தின் உறுதியான நிலைப்பாடாகும்.

இந்த நோக்கத்தை சமாதான வழிமுறைகளில் அடைய முடியாது எனபதால், போர் மூலமே அதைச் சாதிக்க அது முனைகின்றது அதனால்தான் போர்க்களங்களிலுள்ள சிங்களப் படை முகாம்களுக்குச் சென்று இராணுவத்திற்கு ஆசிகள் கூறி. யுத்தத்தில் வெல்லவேண்டும் என்று பூசைகள் வைக்கின்றனர்; போரை ஆதரிக்கின்றனர்.

22-5-92 அன்று, சமாதான நல்லெண்ணத் துதுக்குழு என்று கூறிக்கொண்டு, பௌத்த பிக்குகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்தது. அது போர்க்கைதிகளின் விடுதலை பற்றிப் பேசியதுடன் ஒரு தீர்வுத்திட்ட நகலையும் புலிகள் இயக்கத்திடம் கையளித்தது. அதைப் பரிசீலனை செய்த புலிகளின் தலைமை, அத்தீர்வுத்திட்டத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அது ஏற்புடையதல்ல என அக்குழுவினருக்கு விளங்கப்படுத்தியது. ஆனாலும் அவர்களின் நல்லெண்ண முயற்சியைப் பாராட்டியதுடன், தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்துடன் மறுபடியும் வருகைதரும்படி, புலிகள் அழைத்தனர். பௌத்தபிக்குகள் அதை ஆமோதித்து. தாம் சென்று அரசுடன் பேசி ஒரு புதிய தீர்வுத்திட்டத்துடன் திரும்பவருவதாகக் கூறி, சிறீலங்கா சென்றனர். ஆனால் அந்த பௌத்தபிக்குகளின் குழு ஒரு வருடமாகியும் திரும்பி வரவில்லை. தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை பௌத்த மத துறவிகள் வரையமாட்டார்கள் என்பது, எதிர்பார்க்கப்பட்டதே.

சிங்களதேசத்தின் அரசியலை ஆட்டிப்படைக்கும் வல்லமையுடன், சிறீலங்காவில் இரண்டு மதபீடங்கள் இருக்கின்றன. ஒன்று, அஸ்கிரிய பீடம்; மற்றையது மல்வத்த பீடம். இந்த இரண்டு பீடங்களையும் சேர்ந்த பிக்குகள் அந்தபௌத்த நல்லெண்ணக் குழுவில் பங்கொள்ளவில்லை என்பதிலிருந்து, அந்த பௌத்த பிக்குகளது குழுவின்செயல் திறனை - செயல் அதிகாரத்தை - மதிப்பிடலாம்.

7-1-93 அன்று யாழ். வந்த கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோவும், இந்த சக்திமிக்க பௌத்த மதபீடங்களின் குருமாரைச் சந்தித்து. அவர்களது ஆதரவுடன் சமாதானத்திற்குரிய சூழலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவேன் என்று கூறிச் சென்றார். ஆனால் கொழும்பு சென்ற ஆயருக்கு சிங்கள பௌத்த பேரினவாதிகளின் வசைமாரிதான் காத்திருந்தது. இருந்தாலும் அங்கிலிக்கன் ஆயர் அவர்கள் சமாதான சூழல் ஒன்றை ஏற்படுத்த, அயராது பாடுபடுகின்றார்.

அதேபோன்றுகான் அண்மையில் வந்திருந்த சர்வதேச நல்லெண்ணத் தூதுக்குழுவினரும், இந்த மதபீடங்களின் ஆதரவை எதிர்பார்த்து, அது கை கூடாத நிலையிலேயே தமது யாழ் விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

ஆனாலும், இந்த நல்லெண்ணக் குழுக்களின் தமிழீழ விஜயம், எமது விடுதலைப் போராட்டத்திற்கு பல வழிகளில்நன்மையைத் தந்துள்ளது.

தமிழரின் தேசியப்பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை; இதை அரசியல் வாதிகள் தீர்க்கமுடியுமே அல்லாமல் மதகுருமார்களால் அது முடியாது ஆனால் சிங்கள அரசியல் வாதிகள் அதற்குத் தயாராக இல்லை.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் சமாதான முயற்சியை மேற்கொண்டு, புலிகளுடன் நேரடிப்பேச்சுக்களை நடாத்தும் சூழல் ஏற்படும் போதுதான், ஒரு சமரசம் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. இதை சிங்கள தேசத்தின் பிரதான கட்சிகள் கவனத்தில் கொள்வது நன்மை அளிக்கும். ○

## அன்றும் இன்றும்!

'இந்தப் பிள்ளைகள் என்ன செய்யப்போகின்றன?'

இவ்வித கவலையோடு அந்தத் தந்தை முற்றத்தில் விளையாடிய குழந்தைகளைப் பார்த்து எண்ணிக்கொண்டிருந்தார்.

'நாங்கள் எவ்வளவைப் பார்த்தம்! இதுகளுக்கு...?

ரயில் தெரியாது, மின்சாரவசதி தெரியாது, வீட்டில் உள்ள காற்றாடி, குளிர்சாதனப்பெட்டியின் பாவனை தெரியாது, கொழும்பு தெரியாது......

இந்தப் பிள்ளைகள் என்ன செய்யப்போகின்றன?'

என அவரது கவலை வளர்ந்து கொண்டிருந்தது.

இவ்வேளை வானத்தே பெரும் முழக்கம் கேட்டது. அது இயற்கையின் இடிமுழக்கம் அல்ல!

"பிள்ளையள் உள்ளுக்கை போங்கோ! குண்டு போடுறான்." இது, அந்தத் தந்தையின் தடுமாற்றக் குரல்.

''இல்லை அப்பா.'' இது, விளையாடி நின்ற சிறுபிள்ளையின் குரல் - அது தொடர்கின்றது.

'' அது குண்டு இல்லை, கெலி எங்கேயோ றொக்கற் அடிக்கிறான்.''

குழந்தை தந்தைக்கு மேலும் துணிவூட்டுகின்றது.

'' அது தூரத்தில அப்பா. ''

தந்தை திகைத்து நிற்கின்றார்.

'இந்தப் பிள்ளையளுக்கிருக்கிற போர்அறிவு எங்களுக்கில்லை.

நாங்கள்தான் இந்தப் போர்வாழ்வில் என்ன செய்யப் போறமோ...!'

தந்தையின் உள்ளம், பிள்ளைகளை நினைத்துப் பூரித்து வியக்கின்றது. ○

உண்மை நிகழ்விலிருந்த

www.eelamview.com

www.eelamview.com



# போர்க்கைதிகளின் விடுதலையும் பொருளாதாரத்தடைநீக்கமும்

சிறீலங்கா அரசின் பிரதிநிதி பிரிகேடியர் வீரசேகராவுக்கும் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் போர்க்கைதிகளின் விடுதலை தொடர்பாக நடந்த பேச்சுக்களில், ஓர் உடன்பாடு காணப்பட்டிருந்தது.

புலிகள் இயக்கத்தின் காவலிலிருந்த 39 போர்க்கைதிகளின் விடுதலைக்குப் பதிலாக தமிழ்மக்கள் மீதான பொருளாதாரத் தடை அகற்றப்படவேண்டும் என்பதே அதுவாகும்.

கடந்த மூன்று வருடங்களாக சிங்கள அரசால் தீவிரமாக நடைமுறைப்படுத்தப் பட்ட பொருளாதாரத் தடையால் பல்வேறு இன்னல்களையும், துயரங்களையும் அனுபவித்த மக்கள் இதனால் பெரும் ஆறுதல் அடைந்தனர்.

ஆனால் இப்போது, அந்த எழுத்துமூலமான உடன்பாட்டிற்கமைய பொருட்களை அனுப்பச் சிங்கள அரசு மறுத்துள்ளது.

1990 யூன் 10 ஆம் திகதி சிங்களப்படைகளுடனான போர் ஆரம்பித்தபின், பல்வேறு பொலிஸ் நிலையங்களிலிருந்தும் 41 சிங்களப் பொலிசார் போர்க்கைதிகளாக்கப்பட்டிருந்தனர். அதேவேளை 1991 இல் ஆனையிறவுச் சமரின்போது ஒரு இராணுவச் சிப்பாயும் கைது செய்யப்பட்டார். இவருடன் மொத்தம் 42 போர்க்கைதிகள் புலிகளின் பாதுகாப்பில் இருந்தனர். சர்வதேச் செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் இவர்களை மாதம் ஒருமுறை சென்றுபார்த்து, அவர்களுக்குத்தேவையான மருத்துவ உதவிகளை வழங்க அனுமதிக்கப்பட்டிருந்தனர் அத்துடன் கைதிகள் தத்தமது உறவினர்களுடன் மாதமொருமுறை என்ற ரீதியில் கடிதத்தொடர்பு வைக்கவும் புலிகள் வசதிசெய்து கொடுத்தனர். அதேவேளை பொழுதுபோக்கிற்கு, வாசிப்பிற்கு, உடற்பயிற்சிகளுக்கு என்று பல வசதிகளையும் புலிகள் இயக்கம் செய்துகொடுத்திருந்தது.

இப் போர்க்கைதிகளில் ஒருவர் கடும் நோய் வாய்ப்பட்டிருந்ததன் காரணமாக மனிதாபிமானத்தின் அடிப்படையில், தலைவர் பிரபாகரனின் ஆணையைத் தொடர்ந்து ஏற்கெனவே விடுதலை செய்யப்பட்டிருந்தார். இப் போர்க்கைதியைப் பொறுப்பேற்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அவரை அவரது உறவினர்களிடம் சேர்ப்பித்தது.

அதேபோன்று, சமாதான சூழலை உருவாக்கும் ஒரு நல்லெண்ண முயற்சியாக 7-1-93 அன்று, கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

ஆயரின் முயற்சிக்கு ஒரு தார்மீக பலத்தைக் கொடுக்கவும் சமாதானத்தை ஏற்படுத்துவதில் புலிகள் இயக்கத்திற்கிருக்கும் நல்லெண்ணத்தை சிறீலங்கா அரசுக்கு வெளிப்படுத்தும் நோக்கிலும்தலைவர் பிரபாகரன், இரண்டு போர்க்கைதிகளை எந்தவித நிபந்தனைகளும் இன்றி விடுவித்து, ஆயரின் கைகளில் ஒப்படைத்தார்.

அதேவேளை எஞ்சிய 39 போர்க்கைதிகளின் விடுதலைக்கு புலிகள் நிபந்தனையொன்றை இட்டார்கள்.

சிறீலங்காச் சிறைகளிலுள்ள புலிகள் இயக்கத்தினரில் இதே தொகையினரை விடுவித்தால், பதிலாக இப் போர்க்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று நிபந்தனை இட்டது. அதன்பேரில் சிறீலங்காச் சிறைகளிலுள்ள புலிகள் உறுப்பினர்களது பட்டியலைத் தரும்படி புலிகள் கேட்டனர். ஆனால் அவ்விதம் ஒரு பட்டியலைக் கையளிக்கமுடியாது என அரசு மறுத்துவிட்டது, பதிலாக, யார் யார் விடுவிக்கப்படவேண்டும் என்று புலிகள் இயக்கம் ஒரு பெயர்ப் பட்டியலைத் தந்தால் தாம் பரிசீலிப்போம் என அரசு கூறியது. அப்படியான ஒரு பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பது நடைமுறையில் இயலாதது. ஏனென்றால், சண்டைகளின் போது மீட்கமுடியாமல் போன உடல்களில், யார் யார் உயிரிழந்தார்கள் அல்லது யார் யார் காயமடைந்து சுயநினைவற்ற நிலைகளில் கைதானார்கள் என்பது தங்களுக்குத் தெரியாது என, புலிகள் தமது நிலைப்பாட்டிற்கு விளக்கம் கூறினர். ஆனாலும் சிறைகளில் உள்ள புலிகள் இயக்கத்தினரின் பெயர்ப்பட்டியலை பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தரமுடியாது என, அரசு அடம்பிடித்தது.

இதேவேளை, புலிகளிடம் உள்ள ஒரேயொரு இராணுவ போர்க்கைதியை விடுவிப்பதில் இராணுவத் தலைமைப்பீடம் மிகவும் அக்கறையாக இருந்தது. யாராவது சிறையில் உள்ள ஒருவரை பெயர்குறிப்பிட்டு புலிகள் தெரிவிப்பார்களானால், அவரை விடுதலை செய்து தமது சிப்பாயை விடுவிக்க விரும்புவதாக, புலிகள் இயக்கத்திற்குச் செய்தி அனுப்பினர். 1989ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட மரியதாஸ் என்ற ஆசிரியரை விடுதலை செய்யும்படி, புலிகள் பெயர் கொடுத்தார்கள். ஆனால் அவரை விடுவிக்க முடியாது; அவர் அமிர்தலிங்கம் கொலை வழக்கிற்குத் தேவையானவர் என்று கூறி இராணுவத்தலைமை அப்பெயரை நிராகரித்துவிட்டது.

இவ்விதம் புலிகளிடம் போர்க்கைதிகளாக உள்ள தனது படைவீரர்களை விடுவிப்பதில் எந்தவித அக்கறையையும் அரசு காட்டாத நிலையில், தாமே சாத்வீகரீதியில் போராடி, தமது விடுதலையை துரிதப்படுத்த போர்க்கைதிகள் தீர்மானித்தனர். இதன் அடிப்படையில் போர்க்கைதிகள், சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கப்போவதாக புலிகள் இயக்கத்திற்கும், சர்வதேச செஞ்சிலுவை யாழ். கிளைக்கும், அவர்களூடாக சிறீலங்கா அரசுக்கும் தெரியப்படுத்தினர். ஆனால் இந்தச் செய்தியை சிங்கள அரசும் சிங்களப்பத்திரிகைகளும் ஆரம்பத்தில் இருட்டடிப்புச் செய்தன. இருந்தாலும் போர்க்கைதிகள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை 13-6-93 அன்று ஆரம்பித்தனர்.

உண்ணாவிரதம் தொடங்கி ஏழாம் நாள் போர்க்கைதிகளின் விடுதலை குறித்துப்பேச சிறீலங்கா அரசு, பிரிகேடியர் வீரசேகரா என்பவரைத் தனது பிரதிநிதியாக யாழ்ப்பாணம் அனுப்பியது. இந்த இராணுவ அதிகாரிதான் 1986 ஆம் அண்டு, அன்றைய யாழ். மாவட்ட தளபதியாக இருந்த கேணல் கிட்டுவுடன் ஒரு கைதிப் பரிமாற்றத்தை நடாத்தியிருந்தார் என்பது, குறிப்பிடத்தக்கது.

இந்த அரசுப் பிரதிநிதியை புலிகளின் பிரதிநிதிகள் சந்தித்தனர். போர்க்கைதிகளின் விடுதலை தொடர்பாகப் பேசினர் - கைதிப்பரிமாற்றம் தொடர்பான புலிகளின் முன்னைய நிபந்தனையை மீண்டும் அரசு நிராகரித்தது. இதன் பின் புலிகள் பொருளாதாரத் தடையை நீக்கும்படி புதிய நிபந்தனையை இட்டனர். முதலில் இந்த நிபந்தனையை ஏற்க அரசு விரும்பவில்லை. தடைசெய்யப்பட்ட சில பொருட்களை உடனடியாக அனுப்பமுடியாது. அதில் நடைமுறைச் சிக்கல்கள் சில உளளன என்று காரணம் கூறி, பின்வாங்க முனைந்தனர். இதைநீக்குவதற்கு புலிகள் ஒரு ஆலோசனையை வழங்கினர். அதாவது முதலில் சில அத்தியாவசியப் பொருட்களுக்கான தடையை அகற்றி அவற்றை அனுமதித்துவிட்டு, பின்னர் படிப்படியாக ஏனைய பொருட்களையும் அனுப்பிப் பொருளாதாரத் தடையை நீக்கலாம் என்றனர். அத்துடன், இதை ஒரு கைதிகளின் விடுதலை தொடர்பான நிபந்தனையாக மட்டும் கருதாது, சமாதான சூழலை உருவாக்கும் ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையாகவும் மேற்கொள்ளும்படி, புலிகள் வலியுறுத்தினர்.

புதிய நிபந்தனை மற்றும் அதைச் செயற்படுத்துவதற்குரிய ஆலோசனைகளுடன் கொழும்பு சென்ற வீரசேகரா மீண்டும் 21-6-93 அன்று யாழ் திரும்பினார் வரும்போது பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு தாம் தயார் என்ற ஒப்புதலை எழுத்து மூலம் புலிகள் இயக்கத்திடம் சமர்ப்பித்தார். அதில் கூட்டுப்படை தலைமைத் தளபதி ஜெனரல் கமில்டன் வணசிங்கா கையெழுத்திட்டிருந்தார். இதன் அடிப்படையில் போர்க்கைதிகளை விடுவிக்க புலிகள் இணங்கினர். உண்ணாவிரதிகளுக்கும் இது தெரிவிக்கப்பட்டு, உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டது.

இந்த ஒப்புதல் கடிதத்தை வைத்துக் கொண்டு, போர்க்கைதிகள் அனைவரையும் விடுதலை செய்து உடனடியாகவே தன்னுடன் அனுப்பும்படி, பிரிகேடியர் வீரசேகரா புலிகளிடம் வேண்டினார். ஆனால் புலிகள் இதற்கு உடன்படவில்லை. வாக்களிக்கப்பட்டது போல பொருளாதாரத் தடை நீக்கம் நடைமுறைக்கு வரும் அதேவேளை, படிப்படியாக போர்க்கைதிகளும் விடுவிக்கப்படுவர் எனப் புலிகள் தெரிவித்தனர். ஆனாலும் போர்க் கைதிகளில் ஐவரை உடனடியாகவே விடுதலை செய்து, பிரிகேடியர் வீரசேகராவுடன் புலிகள் அனுப்பி வைத்தனர்.

அகிம்சைத் தத்துவத்தின் ஆத்மீக அறத்துக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் எப்பொழுதும் மதிப்பளிக்கும் என, கைதிகளின் விடுதலை தொடர்பாக தலைவர் பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

ஆனாலும், வாக்குறுதி அளித்ததுபோல பொருளாதாரத் தடையை நீக்க, இறுதிநேரத்தில் அரசு மறுத்துவிட்டது.

'புதிய நிபந்தனைகளை புலிகள் விதித்துள்ளனர்' என்று ஒரு பொய்யான தகவலை வெளியிட்டு, போர்க்கைதிகளின் விடுதலையையும்-பொருளாதாரத் தடை நீக்கத்தையும் சிறீலங்கா அரசு ஒரு நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

போர்க்கைதிகளின் விவகாரம் தொடர்பான புலிகளின் அணுகுமுறைகள் தமிழ் மக்களின் நலனை முதன்மைப்படுத்தியதாகவே இருந்தது. இதனால் கைதிகளின் விடுதலைக்கான நிபந்தனைக்கு ஒரு தார்மீக அடிப்படை உண்டு.

அத்துடன் பொருளாதாரத் தடை நீக்கத்தை ஒரு நல்லெண்ண சமாதான முயற்சிக்கான அடித்தளமாக பயன்படுத்த முடியும்.

ஆகவே, சிறீலங்கா அரசு எழுத்து மூலம் வாக்குறுதி அளித்ததுபோல பொருளாதாரத்தடை நீக்கத்தை அமுல்படுத்தி, அதை நீடிக்கச் செய்து, தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்வதுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குரிய ஒரு வழி முறையாகவும் இதைக் கையாளலாம். அதுதான் அரசியல் விவேகமான செயலுமாகும்.

இந்தக் கைதிகள் விடுதலை அரசுக்கும் புலிகளுக்கும் மத்தியில் ஒரு புதிய உறவை ஏற்படுத்தி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் ஒரு புதிய திருப்பு முனையைத் தோற்றுவிக்கும் நல்ல அறிகுறியாகவும் அமையவேண்டும் என்பதுதான், தமிழீழ மக்களின் விருப்பமாகும். ○




கரும்புலிகளின் நினைவுப் படம் இணைக்கப்பட்டுள்ளது

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com